பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 மார்கழி 16 செவ்வாய்க்கிழமை (31-12-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:35

# பாதுகாப்பு வலய விவகாரம் பற்றி பலாலியில் இன்று உயர் மாநாடு!

## அமைச்சர் மிலிந்த, ஒஸ்ரின் ஜெனரல் பலகல்ல பங்குபற்றுவர்

யாழ்ப்பாணம்,டிசெம்பர்31

**பெரும் சர்ச்சைக்குரியதாக மாறியிருக்கும் அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்கென - அரசின் சமாதானப் பேச்சுக் குழு பிரதிநிதி - அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையில் பலாலி இராணுவத் தலைமையகத்தில் இன்று உயர்மட்ட மாநாடு இடம்பெறவுள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின்பேரில் அவசர அவசரமாக இந்த மாநாடு கூட்டப்பட்டுள்ளது.**

அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பான விடயத்தில் வடபகுதி இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா சில நிபந்தனைகளை விதித்திருந்தமை தெரிந்ததே. இதனையடுத்து அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசம் தொடர்பான விடயம் பெரும் சர்ச்சைக்குள்ளாகி இருந்தது.

இந்த விடயத்தில் இரு தரப்பின

(14ஆம் பக்கம் பார்க்க)

## உயர் பாதுகாப்பு வலயங்களை இப்போது அகற்ற முடியாது

### கண்காணிப்புக் குழு பிரதித்தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.31

சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே வடக்கு - கிழக்கு பகுதிகளிலுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட வேண்டும். என்று போர் நிறுத்த கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

கண்காணிப்புக் குழுவின் பிரதித்தலைவரான ஹொக்லண்ட் இதுதொடர்பாகக் கூறுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துக்கு கருத்துக்களையும் விமர்சனங்களையும் தெரிவிப்பதற்கு உரிமை உண்டு.

அரசு, புலிகளின் அழைப்பின்

(14ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே பேச்சுக்கள் குறித்து ஜனவரி 14 ஆம் திகதி விவாதம்

### அரச நாடாளுமன்றக் குழு தீர்மானம்

நோர்வேயில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே சமீபத்தில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் நடைபெறவிருக்கின்றது. எதிர்வரும் ஜனவரி மாதம் 14ஆம் திகதி இவ்விவாதத்தை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

சமாதானப் பேச்சுக்கள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கை ஒன்றை விடுத்தது தெரிந்ததே.

இந்த அறிக்கை தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கடிதம் மூலம் பிரதமரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இக்கோரிக்கை குறித்து ஆராய்ந்த அரசாங்க நாடாளுமன்றக் குழு, அடுத்த மாதம் 14ஆம் திகதி இவ்விவாதம் நடைபெறலாமெனத் தீர்மானித்திருக்கிறது. விவாதத்துக்கு இரண்டு நாள்கள் ஒதுக்கப்படவேண்டுமென்று பொ.ஐ.முன்னணியும், ஜே.வி.பியும் விடுத்திருந்த கோரிக்கையை நாடாளுமன்றக் குழு ஏற்றுக்கொள்ளவில்லை. (ம)

### மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி

## பிரதேசசெயலக வாயிலை பூட்டி பொன்னாலை மக்கள் மறியல்!

வலிமேற்கு,டிசெ.31

பொன்னாலைப் பகுதியிலிருந்து கடற்படையினரை வெளியேற்றி அப்பகுதியில் பொதுமக்களை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி வலி.மேற்கு பிரதேச செயலகம் முன்பாக பொன்னாலைப் பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் நேற்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.


காலை 6 மணிமுதலே பொதுமக்கள் மறியலில் ஈடுபட்ட காரணத்தால் பிரதேச செயலகப் பணிகள் யாவும் முற்றாக முடங்கின. ஊழியர்கள் எவரும் அலுவலகத்திற்குள் செல்ல முடியவில்லை. சிறிது நேரம் காத்திருந்து பார்த்துவிட்டு அவர்கள் வீடு திரும்பினர்.

பொன்னாலையைச் சேர்ந்த சுமார் 500 குடும்பங்கள் தமது சொந்த இடத்தில் மீளக்குடியமர்வதற்கு அனுமதி அளிக்குமாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனிடம் கடந்த 17ஆம் திகதி மகஜர் ஒன்றை கையளித்திருந்தனர்.

இந்த மாதம் 27 ஆம் திகதிக்கு முன்பு தமது கோரிக்கைக்கு சாதகமான பதிலைத் தருமாறும், இல்லையேல் மறியல் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் அந்த மகஜரில் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

அரச அதிபரிடமிருந்து சாதகமான பதில் கிடைக்காததையடுத்து நேற்றுக்காலை 6 மணிக்கே பொன்னாலை மக்கள் ஒன்றுதிரண்டு சங்கானையிலுள்ள வலி.மேற்கு பிரதேச செயலகத்தின் இரண்டு 'கேற்று'க்களுக்கும்

(14ஆம் பக்கம் பார்க்க)



சங்கானையில் உள்ள வலி.மேற்கு பிரதேச செயலக கதவுகளைப் பூட்டிவிட்டு அதன் முன்பாக அமர்ந்திருந்து மறியற் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பொன்னாலை மக்களை படங்களில் காணலாம்.

(படங்கள் : வட்டுக்கோட்டை செய்தியாளர்)

## கிழக்கில் 11 எம்.பிக்களும் தொண்டமானும் பொ.ஐ.மு. அரசமைக்க ஆதரவளிக்கத் தயார்!

### ஊடகப்பேச்சாளர் சரத் அமுனுகம கூறுகிறார்

கொழும்பு,டிசெ.31

எந்தவொரு வேளையிலும் அரசாங்கம் ஒன்றை அமைக்க எமக்கு ஆதரவு வழங்குவதாக கிழக்கின் 11 எம்.பிக்கள் சமிக்ஞை காட்டியிருக்கின்றனர். அரசமைக்க 110 எம்.பிக்களை திரட்டினால் ஆதரவளிக்க தொண்டமானும் தயாராக இருக்கிறார் - இவ்வாறு பொ.ஐ. முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம கூறியிருக்கிறார்.

கலகெதர தொகுதியின் சுதந்திரக் கட்சிப் பிரதம அமைப்பாளராக நியமிக்கப்பட்டபின் அங்குள்ள தனது அலுவலகத்தில் நடத்திய கூட்டத்திலேயே

(14ஆம் பக்கம் பார்க்க)

## வைரஸ் காய்ச்சலை இனங்காண கொழும்பிலிருந்து நிபுணர் குழு

### இன்று யாழ்ப்பாணம் வருகின்றது

யாழ்ப்பாணம்,டிசெ.31

குடாநாட்டில் பரவிவரும் வைரஸ் காய்ச்சலுக்கான காரணங்களை இனங்காண்பதற்காக கொழும்பிலிருந்து விசேட நிபுணர்கள் குழு ஒன்று இன்று யாழ்ப்பாணம் வருகின்றது.

கொழும்பு பிரதி சுகாதார பணிப்பாளர் நாயகம் (பொதுசுகாதார சேவைகள்) தொற்றுநோயியல் பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட நிபுணர்கள் அடங்கிய குழுவே வருகின்றது.

யாழ்.சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி செல்வி உ.சிவபாதசுந்தரம் இதனை அறிவித்திருக்கிறார்.

'நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் பொதுமக்கள் அக்கறையில்லை' என்ற தலைப்பில் நேற்றைய உதயனின் முதல் பக்கத்தில் வெளியான செய்தி தொடர்பாக மாகாண பிரதி

(14ஆம் பக்கம் பார்க்க)

## பொது எதிர்க்கட்சியை உருவாக்க பொ.ஐ.முன்னணி - ஜே.வி.பி. கூட்டு

நாடாளுமன்றத்தில் பொதுவான எதிர்க்கட்சி ஒன்றை உருவாக்குவது தொடர்பாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் நேற்று பிற்பகல் 5 மணிநேரம் கலந்துரையாடியுள்ளன.

ஜனாதிபதி மாளிகையில் நடந்த இச்சந்திப்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுராபண்டாரநாயக்க, லக்ஷ்மன் கதிர்காமர், ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாகவும் அப்போது கலந்துரையாடப்பட்டது.

"நாங்கள் ஒரு பலமானதும் முற்போக்கானதுமான கூட்டை அமைக்கவே விரும்புகின்றோம். அதனால், ஐக்கிய தேசிய முன்னணிக்கு, எதிரான எந்தக்கட்சியும் எம்முடன் சேர்ந்து கொள்ளலாம்" என்று ரில்வின் சில்வா கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### உரும்பிராயில் மர்ம மரணமடைந்த

# மாணவிமீது வல்லுறவு முயற்சியா? மரபணுச் சோதனை நடத்தப்படும்

யாழ்ப்பாணம்,டிசெ.31

உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட மாணவி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டாரா? அல்லது பாலியல் வல்லுறவு முயற்சிக்கு உட்படுத்தப்பட்டாரா? என்பதை அறிவதற்கு மரபணுப் பரிசோதனை மேற்கொள்ள யாழ்.நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

பிரஸ்தாப மாணவி கிணற்றுக்குள் வீசப்படுவதற்கு முன்னர் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டாரா என்பதை அவரது பிரேத பரிசோதனையிலிருந்து அறியமுடியவில்லை என நீதிமன்றத்துக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனையடுத்து மாணவி அணிந்திருந்த உள்ளாடை மற்றும் சந்தேக நபரின் இரத்த மாதிரி ஆகியவற்றை மரபணுச்சோதனைக்கு உட்படுத்துவது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

இதுகுறித்து யாழ்ப்பாணம் வந்துள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் டி.ஜி.ஹரேந்திர டி சில்வாவுடன் யாழ்.

(13ஆம் பக்கம் பார்க்க)

# சட்டவிரோதமாக கருக்கலைப்பு செய்த இளம்பெண் உயிரிழப்பு!

செம்பியன்பற்று,டிசெ.31

சட்டவிரோதமாகக் கருக்கலைப்புச் செய்த திருமணமாகாத 19 வயது இளம் பெண் ஒருவர் மரணமானார். வடமராட்சி, கரவெட்டிப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காய்ச்சலால் பீடிக்கப்பட்டு மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு இப்பெண் எடுத்துவரப்பட்டபோது இடைவழியில் மரணமானதாகக் கூறப்பட்டது.

ஆனால், இப்பெண்ணின் மரணம் தொடர்பாக பிரேத பரிசோதனை நடத்திய மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை, கருச்சிதைவு ஏற்பட்டு அதனால் உண்டான கடுமையான ரத்தப்பெருக்கு, அதிர்ச்சியினால் இம்மரணம் ஏற்பட்டது எனக் கூறியுள்ளார்.

பெண்ணின் மரணம் தொடர்பாக மரண விசாரணை நடத்திய பருத்தித்துறைப் பதில் நீதிவான் ந.தங்கராசா பகிரங்கத் தீர்ப்பு வழங்கினார். பெண் மரணமாவதற்கு காரணமான கருச்சிதைவை மேற்கொண்டவர்களைக் கண்டுபிடித்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறும் அவர் நெல்லியடிப் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

(ம-173-36)

### குடாநாட்டில் வேகமாகப் பரவிவரும்

# காய்ச்சலை கட்டுப்படுத்த விழிப்புணர்வு நடவடிக்கை

## இது குறித்து ஆராய செயலகத்தில் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.31

குடாநாட்டில் தற்போது வேகமாகப் பரவிவரும் காய்ச்சலைக் கட்டுப்படுத்த மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வழிமுறைகள் பற்றி ஆராய எதிர்வரும் 4ஆம் திகதி யாழ்.செயலகத்தில் கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்த விழிப்புணர்வுப் பணியில் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், சமுர்த்தி அமைப்புக்கள், இளைஞர் கழகங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோரை ஈடுபடுத்தும் நோக்கத்துடன் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதனால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கூட்டத்துக்கு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலர்கள், பிரதேச சபைகள், மாநகர சபை ஆகியவற்றின் அதிகாரிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இன்றைய காலகட்டத்தில் மக்கள் மேற்கொள்ள வேண்டிய முன்யோசனையான தடுப்பு நடவடிக்கைகள், நுளம்பை ஒழிக்க முன்னெடுக்கப்படவேண்டிய திட்டங்கள் ஆகியன தொடர்பாக இந்தக் கூட்டத்தில் ஆராயப்படும்.

(ம-3)

# பளையில் மீளக்குடியமர்ந்தோர் செயலகம் முன் நேற்று மறியல்

யாழ்ப்பாணம்,டிசெ.31

பளைப் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த மக்கள் இதுவரை தமக்கு எந்தவகையான உதவிகளும் வழங்கப்படாததைக் கண்டித்து பிரதேச செயலகம் முன்பாக நேற்று மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோயில்வேலி, இயக்கச்சி சங்கத்தரவை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த மறியற்போராட்டம் காரணமாக பிரதேச செயலகப் பணிகள் பாதிக்கப்பட்டன.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி சுலோக அட்டைகளைத் தாங்கியிருந்தனர்.

கடந்தகால யுத்தம் காரணமாக இந்தப் பகுதியில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்தனர். இக்காலப் பகுதியில் இப்பகுதியில் இருந்த வீடுகள், பாடசாலைகள் அழிக்கப்பட்டன என்றும் -

இந்த நிலையில் தற்போது தாங்கள் மீளக்குடிமர்ந்தபோதும் தங்களுக்கு எந்தவித உதவிகளும் இதுவரை வழங்கப்படவில்லை என்றும் - மக்கள் தெரிவித்தனர்.

(ம-3-86-173)

## ஒத்திவைப்பு

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மேற்கொள்ளவிருந்த தொழிற்சங்க நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இருபத்தைந்து கோரிக்கைகளை முன்வைத்து ஆரம்பிக்கப்படவிருந்த தொடர்ச்சியான வேலைநிறுத்தம் பேரவை உறுப்பினர் குழுவுடன இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து எதிர்வரும் 3ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஊழியர் சங்கத்தலைவர் சி.கலாராஜ் தெரிவித்துள்ளார்.

(ம-ரி)








திறன் விருத்தி பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைத் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர டி.சில்வா மற்றும் நீதியமைச்சின் மேலதிக செயலாளர் செல்வி லாலினி பேர்ஸன் ஆகியோர் உரையாற்றுதையும், யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா (மத்தி), ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ச.இளங்கோவன் (வலது) மற்றும் பொலீஸ் அதிகாரி உட்பட நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்:ரமணன்)*

# நெல்லியடியில் கைதான சிறுவன் விடயத்தில் பொலீஸாரின் நடத்தை கவலையளிக்கின்றது

## பேராசிரியர் தயா சோமசுந்தரம் உரை



பேராசிரியர் தயா சோமசுந்தரம்.

யாழ்ப்பாணம்,டிசெ.31

நெல்லியடியில் பொலீஸாருக்கும பொதுமக்களுக்கும் இடையில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாகக கைது செய்யப்பட்ட சிறுவன் விடயத்தில் பொலீஸார் நடந்துகொண்ட விதம் கவலை தருவதாக உள்ளது. சிறுவர் உரிமைகளைப் பேணும் சட்ட விதிகளுக்கு முரணாக, குற்றக் கைதிகளுடன் அச்சிறுவன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளான்.

- இவ்வாறு தெரிவித்தார் உளவியல் ஆலோசகர் பேராசிரியர் தயா சோமசுந்தரம்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவும் இணைந்து நடத்திய திறன் அபிவிருத்திப் பயிற்சிப் பட்டறை நேற்று சாந்திகத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பேராசிரியர் தயா சோமசுந்தரம் மேற்கண்டவாறு சொன்னார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நெல்லியடிச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சிறுவன் விடயத்தில் நீதிவான்களின் உத்தரவும் உரிய முறையில் பின்பற்றப்படவில்லை. விலங்கிடப்பட்ட நிலையில் அச்சிறுவன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டான். சட்டத்தின் காவலர்களான பொலீஸாரே இங்கு சட்டங்களை மதிக்காத துர்ப்பாக்கிய நிலை காணப்பட்டுள்ளது - என்றார்.

நிகழ்வில் கலந்துகொண்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைத் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா தனது உரையில் கூறியதாவது:-

இலங்கை முழுவதிலும் உள்ள

(13ஆம் பக்கம் பார்க்க)

# புனர்வாழ்வுத் திட்டங்கள் குறித்து செயலகத்தில் நேற்று ஆராய்வு

குடாநாட்டில் அடுத்த வருடம் மேற்கொள்ளப்படவேண்டிய புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்கள் தொடர்பாக யாழ்.செயலகத்தில் நேற்று ஆராயப்பட்டது.

யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நேற்று நடந்த கூட்டத்தில் பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

மீளக்குடியமரும் மக்களுக்கு வழங்கவேண்டிய உதவிகள் மற்றும் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டிய புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்கள் தொடர்பாக இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

குடாநாட்டில் உள்ள சகலருக்கும் குடும்ப அட்டை வழங்கல், மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கல் ஆகியன தொடர்பாகவும் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

(ம-3)

# மீட்புநிதி மீளளிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.31

யாழ்.மாவட்டத்தில் வதிவோருக்கான தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளளிப்பு, எதிர்வரும் 9ஆம்,10ஆம், 11ஆம் திகதிகளில் காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை முகமாலை தடைமுகாம் பகுதியில் இடம்பெறவுள்ளது என்று விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக இடம்பெறவிருக்கும் இந்த மீளளிப்புக்கள் நடக்கும் திகதிகள் வருமாறு:-

★ 09.01.2003 - நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய், உடுவில்.

★ 10.01.2003 - மானிப்பாய், தெல்லிப்பழை, சங்கானை, காரைநகர், வேலணை, வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி.

★ 11.01.2003 - கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி.

(ம-3)

### வடமராட்சி வடக்குக் கடலில்

# மீன்பிடித் தொழிலில் ஈடுபட படையினர் கட்டுப்பாடு விதிப்பு

வடமராட்சி வடக்கு மீனவர்கள் சுதந்திரமாக கடற்றொழிலில் ஈடுபடுவதைத் தடுத்துள்ள படையினர் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

இதுவரை காலமும் இப்பகுதியில் எவ்வித தடையுமில்லாமல் இரவு பகலாக வீச்சுவலை தொழிலில் ஈடுபட மீனவருக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால், இனிமேல் இரவு வேளைகளில் வீச்சுவலைக் கடற்றொழிலில் எவரையும் ஈடுபடவேண்டாமென படையினர் அறிவித்துள்ளனர்.

அத்துடன் கடற்றொழிலுக்கு எந்த நேரமும் சென்று எப்போதும் திரும்ப, முன்னர் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. தற்போது இரவு வேளைகளில் கடற்றொழிலுக்கு செல்வோர் அதிகாலை 6 மணிக்குப் பின்னரே கடலில் இருந்து கரை திரும்பவேண்டும். அதற்கு முன்னதாக எவரும் கரை திரும்பக்கூடாது எனவும் படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

[illegible] கிறது. இந்நிலையில் இரவுவேளை கடலில் இருந்து திரும்புவதற்கு படையினர் கட்டுப்பாடு விதித்தமையால் மனவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ம-173)

# அடுத்த ஆண்டு கல்வி அபிவிருத்தி தொடர்பாக பயிற்சிப் பட்டறை

## கல்வியாளர்கள் கலந்துகொண்டனர்

யாழ்.குடாநாட்டின் கல்வி அபிவிருத்தியில் 2003ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் திட்டமிடல் பயிற்சிப்பட்டறை ஒன்று நேற்று யாழ்.கல்வி வலயத்தில் நடைபெற்றது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சிப் பட்டறையில் மாணவர்களின் கல்வி, ஆசிரியவாண்மை, விளையாட்டு, தொழிற்கல்வி, பாடத்தெரிவு ஆகிய விடயங்கள் பற்றி ஆராயப்பட்டது. ஒவ்வொரு துறையும் ஒவ்வொரு குழுவிடம் கொடுக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டது.

இப்பட்டறையில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், பாடசாலை அதிபர்கள், கல்விப்பணிப்பாளர்கள் உட்பட கல்வியாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

(ம-8)

### புலிகள் பகுதிக்குள் ஊடுருவிக் கைதானபின்

# விளக்கமறியலில் உள்ள சிப்பாயை அவரது பெற்றோர் பார்வையிட்டனர்

கிளிநொச்சி,டிசெ.31

மணலாற்றில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கடந்த 24 ஆம் திகதி ஊடுருவிய சமயம் தமிழீழ காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு தமிழீழ நீதிமன்றத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிப்பாயை அவரது பெற்றோர் நேற்றுப் பார்வையிட்டனர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவால் அழைத்துவரப்பட்ட பெற்றோர் சிறைவைக்கப்பட்டுள்ள இடத்துக்குச் சென்று அவரைப் பார்த்து நலம் விசாரித்துச் சென்றனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அதிகாரிகளும் அந்தச் சிப்பாயை நேற்றுச் சந்தித்து அவருடன் கலந்துரையாடினர்.

கிளிநொச்சி தமிழீழ நீதிமன்றம் இந்தச் சிப்பாயை எதிர்வரும் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைத்துள்ளமை தெரிந்ததே.

(ம-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ் விமான நிலையத்தில் ஆயுதங்கள் மீட்கப்பட்டன!

## தீவிரவாதத் தாக்குதல் அச்சம் அதிகரிப்பு

பரீஸ்,டிசெ.31

பிரான்ஸ் விமான நிலையம் ஒன்றில் வெடிபொருள்களும் ஆயுதங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதனையடுத்து தீவிரவாதத் தாக்குதல் குறித்த அச்சம் பிரான்ஸில் அதிகரித்துள்ளது.

தலைநகர் பரீஸின் சாள்ஸ்டி கௌலே விமானநிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த காரில் இருந்தே நேற்று முன்தினம் இரவு தானியங்கித் துப்பாக்கிகள், வெடிபொருள்கள் ஆகியவை மீட்கப்பட்டுள்ளன. விமானநிலையத்தில் பொதிகளை கையாளும் பிரிவில் பணியாற்றும் ஒருவருக்கு இந்தக் கார் சொந்தமானதாகும். காரினுள் ஆயுதங்கள் இருப்பதைக் கண்ட பொதுமக்களில் ஒருவர் தெரிவித்த தகவலை அடுத்தே அவை விமான நிலையப் பொலீஸாரால் மீட்கப்பட்டன.

இச்சம்பவத்தை அடுத்து காரின் உரிமையாளர் கைது செய்யப்பட்டார். அவரது குடும்ப உறுப்பினர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். பிரான்ஸில் உள்ள ரஷ்யத் தூதரகம் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டவர்கள் எனக் கருதப்படும் சிலரை கடந்த வாரம் பிரான்ஸ் பொலீஸார் கைது செய்தனர். அதைத் தொடர்ந்து இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.


தற்போது கைதாகியுள்ள விமான நிலையப் பணியாளர் அல்ஜீரியாவைச் சேர்ந்த 27 வயது இளைஞர் ஆவார். இவரது தந்தை இரு சகோதரர்கள் மற்றும் குடும்ப நண்பர் ஆகியோரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கைத்துப்பாக்கி, இயந்திரத் துப்பாக்கி தலா ஒன்று பிளாஸ்ரிக் வெடிபொருள்கள் ஐந்து, 2 டெற்றனேற்றர்கள் ஆகியவையே கைப்பற்றப்பட்டுள்ளன. கடந்த 16 ஆம் திகதி முதல் நேற்றுவரை 16 பேர் தீவிரவாதச் செயல்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளதாகவும் -

கைக்குண்டு தயாரிக்கப் பயன்படும் சாதனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாகவும் -

கைதுசெய்யப்பட்டவர்கள் அல்ஜீரியா அல்லது மொரோகோவைச் சேர்ந்தவர்கள் என்றும் -

பிரெஞ்சுப் பொலீஸார் தெரிவித்தனர். (ஒ)



சீனாவில் விண்வெளி ஓடம் நேற்று ஏவப்பட்டபோது எடுக்கப்பட்ட படம் இது.

**சீனாவின் விண்வெளிப் பயணத்திட்டத்தில் ஷென்ஜோ விண்வெளி ஓடம் நேற்றுக் காலை வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் சீனாவின் முயற்சிக்கு இந்த வெற்றி சாதகமாகியுள்ளது.**

**நேற்று விண்ணுக்கு ஏவப்பட்ட இந்த விண்வெளி ஓடம் ஒரு சுற்றுப் பாதையில் பூமியை சுற்றி வரும். அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் இந்த விண்வெளி ஓடம் பூமிக்கு திரும்பும். பூமியின் அது பாதுகாப்பாக தரை இறங்கினால் அடுத்து விண்வெளிக்கு மனிதர்களை அனுப்ப சீன விண்வெளி ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.**

# வைகோ மீது குற்றப் பத்திரிகை நேற்று நீதிமன்றத்தில் தாக்கல்!

சென்னை,டிசெ.31

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக 'பொடா' சட்டத்தின் கீழ் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டுள்ள ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ உட்பட 9 பேர் மீது நேற்றுத் தமிழகப் பொலீஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர்.



நேற்று நீதிமன்றத்தில்

பூந்தமல்லியிலுள்ள "பொடா" நீதிமன்றத்தில் நேற்றுக்காலை 440 பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த ஜூன் மாதம் மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரில் நடந்த கூட்டத்தில் இந்தியாவில் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்து பேசியதாக வைகோ மற்றும் 8 பேர் மீது 'பொடா' சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து அமெரிகாவிலிருந்து நாடு திரும்பிய வைகோ கடந்த ஜூலை மாதம் 11 ஆம் திகதி சென்னை விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

'பொடா' சட்டத்தின்படி கைது செய்து 180 நாள்களுக்குள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படல் வேண்டும். இதனடிப்படையில் 106 ஆவணங்கள், 115 சாட்சியங்கள், 154 வாக்குமூலங்கள் சில ஒலி,ஒளி நாடாக்கள் இணைக்கப்பட்ட குற்றப் பத்திரிகை நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டது.

அவ்வேளை, வைகோ உட்பட குற்றம் சாட்டப்பட்ட ஒன்பது பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதை தொடர்ந்து நீதிபதி ராஜேந்திரன் விசாரணையை ஜனவரி 2 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதேவேளை, 'பொடா' சட்டத்தின கீழ் தான் கைது செய்யப்பட்டமை மனித உரிமை மீறல் நடவடிக்கை என இந்திய உயர் நீதிமன்றத்தில் வைகோ ஏற்கனவே மனுத்தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# பாகிஸ்தானியர்களுக்கு அமெரிக்கா கட்டுப்பாடு

இஸ்லாமாபாத்,டிசெ.31

அமெரிக்காவில் தங்கி இருக்கும் பாகிஸ்தானியர்களும், அந்த நாட்டுக்குச் செல்லும் பாகிஸ்தானியர்களும் பெயர்களைப் பொலீஸாரிடம் பதிவுசெய்ய வேண்டும் என்ற புதிய கட்டுப்பாட்டை 'அமெரிக்க அரசு கொண்டு வந்துள்ளது. இதற்கு பாகிஸதான் அரசு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர்11தாக்குதலையடுத்து அமெரிக்கா தேசியப் பாதுகாப்பு வருகை மற்றும் வெளியேறல் பதிவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. இந்தத் திட்டத்தின்படி, தீவிரவாத நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்குச் சென்றாலோ, வெளியேறினாலோ தங்கள் பெயரைப் பொலீஸ நிலையத்தில் பதிவு செய்ய வேண்டும். அதேபோல, அமெரிக்காவில் தங்கி உள்ள தீவிரவாத நாடுகளைச சேர்ந்தவர்களும் பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும்.

தீவிரவாத நாடுகளின் பட்டியலில பாகிஸ்தானையும் அமெரிக்கா சேர்த்து உள்ளது. இதனால் இனிமேல் பாகிஸதானியர்களும் பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும். இதன்மூலம் அமெரிக்காவில் வசிக்கும் ஒரு லட்சம் பாகிஸ்தானியர்களும் அமெரிக்கப் பொலீஸின் நேரடி கண்காணிப்பின் கீழ் வருவார்கள்.

தீவிரவாதத்திற்கு எதிரான போரில் அமெரிக்காவின் கூட்டாளி என்று வர்ணிக்கப்பட்ட பாகிஸ்தானையும் பட்டியலில் அமெரிக்கா சேர்த்து இருப்பது, பாகிஸ்தானுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் கோபம் கொண்ட பாகிஸ்தான் அரசு, பாகிஸ்தானுக்கான அமெரிக்கத் தூதர் நான்சி பாவலை அழைத்து எதிர்ப்பைத் தெரிவித்தது. பாகிஸ்தானிய வெளிவிவகார அமைச்சர் குர்ஷித் முகமது கசவுரியை நான்சி பாவல் சந்தித்த போது பாகிஸ்தானின் வருத்தத்தையும், கவலையையும் அவர் தெரிவித்தார். அமெரிக்காவின் பட்டியலில் ஆப்கானிஸ்தான், அல்ஜீரியா, பகரைன், எரிட்ரியா, ஈரான், ஈராக், லெபனான், லிபியா, மொராக்கோ, வடகொரியா, ஓமன், கத்தார், சோமாலியா, சூடான், சிரியா, துனிஷியா, ஐக்கிய அரபு, எமிரேட்ஸ், ஏமன் ஆகிய நாடுகளும் இடம்பெற்றுள்ளன. (ஒ)

உலக அரங்கில்

# நாகப்பாவின் குடும்பத்துக்கு கடிதம் மூலம் கொலை மிரட்டல்!

பெங்களூர்,டிசெ.31

சந்தன மரக்கடத்தல் வீரப்பன் பிடியிலிருந்தபோது கொலை செய்யப்பட்ட கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பாவின் குடும்பத்தாருக்கு கொலை மிரட்டல் கடிதம் வந்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் 25ஆம் திகதி வீரப்பனால் கடத்தப்பட்ட நாகப்பா டிசெம்பர் 8ஆம் திகதி செங்கடி வனப பகுதியில் பிணமாகக் கிடந்தார். அந்த இடத்தில் வீரப்பனுடன் தொடர்புடையோர் குறித்து நாகப்பா குறிப்பிட்டிருந்த டயறியும் கண்டெடுக்கப்பட்டது.

இந்நிலையில் அவரது மனைவி பரிமளா செய்தியாளர்களிடம் கூறியுளளதாவது:-

எங்கள் வீட்டுக்கு மிரட்டல் கடிதம் வந்துள்ளது. நாகப்பா கொலை குறித்து மத்திய புலனாய்வுத்துறை (சி.பி.ஐ.) விசாரணைக்கு உத்தரவிடக கோர வேண்டாம். இப்பிரச்சினையில் குடும்பத்தினர் அனைவரும் மௌனமாக, அமைதியாக இருக்க வேண்டும்.

சி.பி.ஐ.விசாரணையை மீண்டும் மீண்டும் வலியுறுத்தினால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று எழுதப்பட்டுள்ளது.

எனது கணவர் கொலை சம்பவத்தை பெரிதுபடுத்தாமல் இருக்க வேண்டும் என்று மர்ம நபர்கள் தொலைபேசியில் மிரட்டல் விடுக்கின்றனர்.

சிலர் உண்மையை மூடிமறைக்கப் பார்க்கிறார்கள். சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடக் கோருவதில் அரசுக்கு எது தடங்கலாக இருக்கிறது என்று புரியவில்லை என்றார் அவர். (ஒ)

### குப்பையிலிருந்து உரம் தயாரித்த

# பங்களாதேஷ் இளைஞர்களுக்கு வறுமை ஒழிப்புக்கான விருது

டாக்கா,டிசெ.31

குப்பையைப் பயன்படுத்தி நல்ல உரங்களைத் தயாரிக்கும் எளிய முறையை உருவாக்கிய பங்களாதேஷ் இளைஞர்கள் இருவருக்கு ஐ.நா. விருது கிடைத்துள்ளது.

அவர்கள் பெயர் மகூத் சின்ஹா, இனயதுல்லா. வீணாகும் பொருள்களை சரியான முறையில் பயன்படுத்தினால், எந்த பொருளுமே வீணாகாது என்று சின்ஹா கூறுகிறார். இவர் ஒரு கட்டடக் கலைஞர். இனயதுல்லா ஒரு பொறியியலாளர்.

ஆசிய பசிபிக் பகுதியில் வறுமை ஒழிப்புக்கான விருதை ஐ.நா. வளர்ச்சி திட்டத்துறை இவ்விருவருக்கும் வழங்கியுள்ளது.

குப்பை, கூளங்களால் ஏற்படும் 40 வீதமான நோய்களைத் தடுக்கவேண்டுமானால், குப்பைகளைப் பயனுள்ள வகையில் பயன்படுத்தவேண்டும் என்கிறார் இனயதுல்லா.

சாதாரண தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, குப்பையைக்கூட விலை மதிப்புள்ள நல்ல உரமாக மாற்றலாம் என்கிறார் இவர். (ஒ)

MPAQ COMPUTERS
கணனி பாவனையாளர்களுக்கு!
"கம்பியூட்டர் ஒன்றைப் பராமரிப்பது அதனை வாங்குவது போல் இலகுவானதாக ஒரு போதும் இருப்பதில்லை"
மகிழ்ச்சிகரமான செய்தி....
எமது வெள்ளவத்தை (கொழும்பு - 06), கொட்டாஞ்சேனை (கொழும்பு - 13) கிளைகளில் கொள்வனவு செய்யும் கணனி மற்றும் உதிரிப்பாகங்களுக்கு 03 வருட உத்தரவாதமும் விற்பனைக்குப் பிந்திய சேவையையும் எமது யாழ்.நகரில் உள்ள கிளையினூடாக பெற்றுக்கொள்ள முடியும் என்பதை எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
MICRO PC SYSTEMS
175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 0777-308417
WELLAWATTE
No.15, 36th Lane, Colombo - 06
074 - 516764, 074 -513235.
KOTAHENA
No.82, New Chetty Street, Colombo - 13
074 - 619673
Web: www.mipaq.com

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உ

# மாபெரும் இசை நிகழ்ச்சி

**யாழ்.மாவட்டத்தின் முன்னணிக் கலைஞர்களும்
இலை மறைகாயாக இருக்கும்
கலைஞர்களும் பங்குபற்றும்
மாபெரும் இசை நிகழ்ச்சியும் பழம்பெரும்
கலைஞர்கள் கௌரவிப்பும்**

சிறப்பு விருந்தினர்:

**ஸ்ரீமுருகன் ஆத்மீக அருள்ஜோதி
மார்க்கண்டு சுவாமிகள் அவர்கள்
பட்டம் வழங்கிக் கௌரவிப்பார்**

**வை.சந்திரராஜ்**
*(கிராம சேவையாளர், ஆனைக்கோட்டை)*

**எஸ்.ஜே.செல்வராஜா (ஜே.பி.)**
*(சமூக சேவைப் பங்காளர், மானிப்பாய்)*

**K.பிரபாகரன்**
*(மகாஜன சனசமூக நிலையம், ஆனைக்கோட்டை)*



கௌரவிக்கப்படுவோர்:

| | |
|---|---|
| ஈழநல்லூர் அருணா | *(S.அருணாசலம்) கீ போட்* |
| எ.அருள்நாதன் | *(கவிதாலயா இசைக்குழு)* |
| நாகர் கோயில் விஜயன் | *(ஈழ சௌந்தர்ராஜன்)* |
| ஸ்ரனிஸ் சிவானந்தன் | *(பாடகர்)* |
| S.திவாகர் | *(பாடகர்)* |
| சேவையர் நவநீதன் | *(பாடகர்)* |

**இவர்களுடன் நிக்ஷனின் அதிரடி இசையில்**

1. மலரும் ஸ்வரங்கள்
2. தமிழீழ எழுச்சி கானங்கள்
3. இதயராகம்

இடம் : **செல்லமுத்து விளையாட்டு அரங்கு, மானிப்பாய்**
காலம் : நாளை (01.01.2003) புதன்கிழமை
நேரம் : பி.ப.5மணி *(பு.நே.)*

**கலைஞர்களின் ஊக்குவிப்புக்காக
பிரவேசம்: 20/-**

**அனைத்து ரசிகப் பெருமக்களையும்
அன்புடன் அழைக்கின்றோம்.**

(12478) **ஒருங்கிணைப்பாளர்.**


## காவலரணால் போக்குவரத்துக்கு இடையூறாம்

வலி.வடக்கு,டிசெ.31

மூளாய் கூட்டுறவு வைத்திய சாலைக்கு அண்மையாக வீதியில் அமைந்துள்ள காவலரண், வீதியில் செல்லும் வாகனங்களின் போக்குவரத்துக்குப் பெரும் இடைஞ்சலாக இருந்து வருவதாக அப்பகுதியில் நடமாடும் மக்கள் கூறுகின்றனர்.

பொன்னாலை - சங்கானை வீதியில் அமைந்துள்ள இச்சோதனை நிலையம், வீதியை பெருமளவு தடை செய்யக்கூடிய முறையிலேயே அமைக்கப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து முகாம்களின் முன்னாலுள்ள சோதனை நிலையங்கள் பலவும் போக்குவரத்துக்கு தடையில்லாது பின் நகர்த்தப்பட்டுள்ளன. இந்நிலையில் இந்தக் காவலரண் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாகக் கூறப்படுகிறது. (ஒ-86)

## பதிவு விண்ணப்பங்கள் மூன்று நாள்களுக்கு ஏற்கப்படமாட்டா

யாழ். பிறப்பு, இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் நேற்று 30ஆம் திகதி முதல் எதிர்வரும் முதலாம் திகதி வரை பிறப்பு, இறப்பு மற்றும் திருமண அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறுவதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-100)

## கிறிஸ்மஸ் பரிசாக நுளம்பு வலைகள்

தென்னிந்தியத் திருச்சபையினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் 16 கிராம அலுவலர் பிரிவுகளில் மீளக்குடியமர்ந்த 500 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகளை கிறிஸ்மஸ் பரிசாக கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கினர்.

திருச்சபை ஆயர் மேதகு எஸ்.ஜெபநேசன், திட்டப் பணிப்பாளர் இராசநாயகம், சாவகச்சேரி திருச்சபை போதகர் எஸ்.ஜெயக்குமார் ஆகியோர் இந்த நுளம்பு வலைகளை வழங்கினர்.

மண்டுவில், நுணாவில் மேற்கு, கைதடி, நுணாவில், மட்டுவில் வடக்கு, சரசாலை தெற்கு, சரசாலை வடக்கு, மீசாலை கிழக்கு, மீசாலை மேற்கு, பாலாவி, கொடிகாமம் தெற்கு, அல்லாரை, வெள்ளாம்போக்கட்டி, கச்சாய், எழுதுமட்டுவாழ் வடக்கு, வரணி வடக்கு, மாசேரி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 500 குடும்பங்களுக்கே நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன. திருச்சபையினால் ஏற்கனவே 11 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## ஆஞ்சநேயர் ஆலய இசையரங்கு

வலி.வடக்கு,டிசெ.31

மருதனார்மடம் அருள்வாா் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய இலட்சார்ச்சனையையொட்டி ஆலய மண்டபத்தில் இடம்பெற்றுவரும் இசையரங்கில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5மணிக்கு செல்வி பரமேஸ்வரி கணேசனின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.

வயலின் - சோபி, மிருதங்கம் - க.கண்ணதாசன் ஆகியோர் இதில் பங்கேற்கின்றனர். இசையரங்கைத் தொடர்ந்து இளவாலை மெய்கண்டான் வித்தியாலய அதிபர் சைவப் புலவர் செல்லத்துரையின் சொற்பொழிவு இடம்பெறும். (ஒ-86)

## நீங்காத நினைவில் ஓராண்டு...

மலர்வு 22 - 03 - 1929



உதிர்வு 11 - 01 - 2002

**அமரர் தம்பு பரராசசிங்கம்**
திதி: 31.12.2002

ஆதரிக்க ஆயிரம் உறவுண்டு - "அப்பா"
என்று அழைக்க நீங்கள் இல்லை. அப்பாவே!
உங்கள் உடல் எம்மை விட்டு அகன்றாலும்
உயிர் எங்களைவிட்டு அகலாது.
எம் ஆருயிர்த் தெய்வமே!
வாழ்வில் ஒளி பெறச்செய்துவிட்டீர்கள்!
எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மா
சாந்தியடைய எல்லாம்வல்ல நல்லூர்
முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

*டச்சுறோட்,
உடுவில்,
சுன்னாகம்.* (12497)

தங்கள் பிரிவால் துயருறும்:
**அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## நீங்காத நினைவில் மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



**லெப். குழலி / வானதி**
**(பிறேமியா கருணானந்தசிவம்)**

தாயின் மடியில்: 01.06.1982
தாயக மடியில்: 31.12.1999

*விண்ணில் வரும் மேகங்களும் உண்மைப் பாடும்....
தென்றலும், கடலும் எல்லோரும் உனது
தியாகம் சொல்லும்...
விடுதலைக்காய் உயிர் கொடுத்த வானதியே!
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*சரவணை கிழக்கு,
வேலணை.* (12481)

**குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்கள்
(க.மகிந்தன்).**

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 21 - 03 - 1984



தரணியின் அடியில் 31 - 12 - 1992

**செல்வி திவ்வியாழினி நாராயணன்**
(3ஆம் ஆண்டு மாணவி, புனித ஜோண்பொஸ்கோ)

**பத்தாண்டுகள் சென்றாலும் திவிக்குட்டி
பாசமுடன் நினைவு கூர்கின்றோம்.**

*400, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.* (12473)

பப்பா, மம்மி, அக்காமார், அத்தான்மார், உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்.

## 31ஆவது நாள் நினைவஞ்சலி

தோற்றம் 27 - 09 - 1924



மறைவு 01 - 12 - 2002

**அமரர் மூத்ததம்பி அருட்பிரகாசம்**

ஆறாத் துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
மீளாத் துயில் கொண்ட
எமது அன்புத் தெய்வத்திற்கு
எமது இதய அஞ்சலி!

*"இராஜகிரி",
சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.* (12502)

**மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.**

## பத்தாண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 - 06 - 1928



உதிர்வு 21 - 12 - 1992

**திருமதி கந்தையா நல்லம்மா**
*திதி: 31.12.2002*

கண்ணின் மணியாய் எமை வளர்த்து
தரணியிலே தலைநிமிர்ந்து நாம் வாழ
உங்களையே அர்ப்பணித்த எம் தெய்வமே!
ஆழமாக உள்ளத்தில் பதிந்துவிட்ட எங்கள்
அன்னையே! உங்கள் அன்புமுகம்
உலகைவிட்டு நீங்கள் பிரிந்தாலும் - எம்
உயிரைவிட்டுக் கணமும் பிரியாதம்மா!
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!*

(12494)

*'அபிராமி மஹால்',
41/15, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*

**கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**


DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI

# இலவசம்! இலவசம்!! இலவசம்!!!

பாடசாலை மாணவர்களுக்கு இலவசம்
நீங்கள் கொள்வனவு செய்யும்



**DSI**



பாடசாலை மாணவர்களுக்கான சப்பாத்துக்கள் (SHOES)
ஒவ்வொன்றிற்கும் ஒரு றபர் செருப்பு இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**DSI** பாதணிகளின் யாழ்.குடாநாட்டுக்கான ஏக விநியோகஸ்தர்கள்

**SUPER SHOES சுப்பர் சூஸ்**

(கல்யாணி கிறீம் ஹவுஸ் அருகில்)
இல.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (2134)

DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# அரசின் பதில் என்ன?

யாழ்.பாதுகாப்பு வலயப் பிரச்சினை நாடெங்கும் இன்று எதிரொலிக்கிறது.

இன்னும் ஐந்து நாள்களில் தாய்லாந்தில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையே நடைபெறவுள்ள நான்காவது சுற்றுப் பேச்சுக்களிலும் இந்தப் பிரச்சினை எதிரொலிக்கப்போகிறது.

இது தமிழ் மக்களின் வாழ்வியல் பிரச்சினை. இதற்கு ஒரு நல்ல தீர்வு காணாமல் வேறு எதைப் பற்றிப் பேசியும் பிரயோசனம் இல்லை.

எனவே, யாழ்.பாதுகாப்பு வலயங்களில் இருந்து இராணுவம் நிபந்தனையின்றி வெளியேறி, மக்கள் அங்கே தங்கள் சொந்த வீடுகளில் குடியமர வழி செய்ய வேண்டுமென்று பேச்சுக்களின்போது வற்புறுத்துவோம்.

மக்களின் உயிர்ப் பிரச்சினையில் விட்டுக்கொடுக்க முடியாது என்று பேச்சுக்களில் கலந்துகொள்ளும் புலிகள் குழுத் தலைவரும், அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்.

அதனால் விடயம் இறுகிவிட்டது. சமாதானப் பேச்சு தொடர்ந்து நடந்து அதன் இலக்கை அடையுமோ என்ற சந்தேகமும் எழத்தொடங்கிவிட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி அரசு, முக்கிய கலந்தாலோசனைகளை நடத்திவருகிறது.

இராணுவம் உள்ளிட்ட முப்படைகளுக்கும் தளபதியாக இருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நிலையோ வேறு.

புலிகள் இயக்கம் ஆயுதக் களைவுக்கு ஒப்புக்கொண்டாலொழிய, பாதுகாப்பு வலயங்களில் இருந்து படைகள் விலகமுடியாது என்று யாழ்.இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா மறுத்தது குறித்து ஜனாதிபதி மகிழ்ச்சி அடைகிறார்.

இராணுவத் தளபதியின் மறுப்புக்கு கடும் சீற்றத்துடன் அன்ரன் பாலசிங்கம் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து, ஏற்கனவே வேறொரு பகுதிக்குச் சென்றிருந்த ஜனாதிபதி, கொழும்புக்கு பறந்துவந்தார்.

இராணுவத் தளபதி லயனல் பலகல்லவையும் யாழ். இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவையும் வரவழைத்து அவர்களுடன் கலந்துரையாடினார். "மிகவும் துணிச்சலான காரியம் செய்திருக்கிறீர்கள். அதுதான் தேவை." என்று யாழ்.இராணுவத் தளபதியை ஜனாதிபதி வெகுவாகப் பாராட்டினார்.

பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயங்களில் விட்டுக்கொடுக்கக் கூடாது என்று யாழ்.இராணுவத் தளபதிக்கு ஜனாதிபதி உற்சாகம் ஊட்டினார் என்றும் கூறப்படுகிறது.

பாதுகாப்பு யாருக்கு? மக்களுக்கா, பாதுகாப்புப் படையினருக்கா?

தன்னுடைய பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் "சமாதானத்துக்காக யுத்தம்" செய்தவர் அல்லவா ஜனாதிபதி! அந்த யுத்தத்திலே சகட்டுமேனியான விமானக் குண்டு வீச்சுகளாலும் ஷெல் அடியாலும் எத்தனை அப்பாவிப் பொதுமக்கள் துடிதுடித்து இறந்தார்கள்.

ஆக, பொதுமக்களின் பாதுகாப்போ, அவர்களின் வாழ்வியல் பிரச்சினைகளோ ஜனாதிபதிக்கு முக்கியமான முன்னுரிமைப் பிரச்சினைகளாகத் தெரிவதற்கு நியாயம் இல்லை.

யாழ்.பொதுமக்கள் கேட்பதெல்லாம் தங்களைத் தங்கள் சொந்த இடங்களில் குடியமர்ந்து சுதந்திரமாகவும் கஷ்டமின்றியும் வாழவிடுங்கள் என்பதுதான். அதற்கு புலிகள் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்று இராணுவம் நிபந்தனை விதிப்பதன் அர்த்தமும் நோக்கமும் என்ன?

புலிகளிடம் உள்ள ஆயுதங்களையே தமிழ்ப் பொதுமக்கள் தங்கள் பலமாகக் கருதுகிறார்கள்.

இன்றைய போர்நறுத்தம், சமாதானப் போர் எல்லாம் அந்த ஆயுதப் பலத்தால் கிடைத்தவைதான். புலிகளின் ஆயுதங்களைக் களைவது தங்களை பலவீனப்படுத்துவது என்றே தமிழ் பொதுமக்கள் கருதுகிறார்கள்.

எனவே, இராணுவ மயமாக்கிவிட்ட யாழ்ப்பாணத்தை, தொடர்ந்து இராணுவ இரும்புப் பிடிக்குள் வைத்திருந்து மக்களை நசுக்குவதற்குத்தான் அதிஉயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து படையினர் விலக்கப்படாமல் இருக்கிறார்களா என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

இதற்கு அரசுதான் பதில் சொல்லவேண்டும்.

---

### மானிப்பாய் பிரதேசத்தில்

# ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிறுவ அன்பளிப்பாகக் காணிகள் தேவை!

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பிரஸ்தாபம்

சண்டிலிப்பாய்,டிசெ.31

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கிராமங்கள் தோறும் ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைப்பதற்கு காணிகளை ஒழுங்குசெய்து தருமாறு அப்பிரதேச பொது அமைப்புக்களிடமும், பொதுமக்களிடமும் கோரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குடும்ப சுகாதார சேவை அலுவலர் பிரிவிலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவப்பட வேண்டும் என்ற சுகாதார அமைச்சின் திட்டத்திற்கிணங்க மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், அவற்றுக்கான கட்டடங்களை நிறுவுவதற்கான காணிகளை பொதுமக்கள் அன்பளிப்பாக வழங்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு வழங்கப்படும் பட்சத்தில் அதில் நிலையத்திற்கான கட்டடம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற வலி.மேற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திலும், வலி.தென்மேற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.கணேஸ்வரராசா இது தொடர்பாக பிரஸ்தாபித்துள்ளார்.

கட்டடம் நிறுவுவதற்கான காணியை அந்தந்தப் பகுதியிலுள்ள பொதுநல அமைப்புகள் முன்னின்று முயற்சி செய்து பெற்றுத்தர முன்வரவேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதேவேளை - நீண்டகாலமாக தனியார் கட்டடங்களில் பல்வேறு வசதியீனங்களுக்கு மத்தியில் இயங்கிவரும் வட்டுக்கோட்டை அரசினர் மத்திய மருந்தகம், இளவாலை அரசினர் மத்திய மருந்தகம் ஆகியவற்றிற்கும் நிரந்தரக் கட்டடங்களை நிறுவுவதற்கான காணிகள் தேவைப்படுவதாகவும் -

இதற்கான காணிகளை பொதுமக்கள் அன்பளிப்பாக வழங்கும் பட்சத்தில் அங்கு நிரந்தரக் கட்டடங்கள் நிறுவப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு வெளிநாடுகளில் இருந்து கணிசமான நிதி உதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் மேற்படி நிரந்தரக் கட்டடங்களை நிறுவி பொதுமக்களுக்கு வைத்திய மற்றும் சுகாதார வசதிகளை திருப்திகரமாக வழங்கக்கூடிய நிலை ஏற்படும என்று சுகாதார திணைக்கள வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன. (ஒ-135)

---

# பொ.ஐ.முவிலிருந்து விரைவில் கம்யூனிஸ்ட் கட்சி விலகும்!

## அதன் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.31

பொ.ஐ.மு. கூட்டணியிலிருந்து விலகி சுயேட்சையாக அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி விரைவில் தீர்மானிக்க உள்ளதாகக் கூறப்படுகிறது.

அக்கட்சியின் வருடாந்த மாநாட்டில் உரையாற்றிய கட்சிச் செயலாளர் இது தொடர்பாகத் தகவல் தருகையில் தெரிவித்ததாவது:-

கடந்த ஏழு வருடகாலமாக பொ.ஐ.முவுடன் இணைந்து பணியாற்றிய போதிலும் நாட்டுக்கு எந்தவொரு பயனும் கிடைக்கவில்லை. நாட்டின் இறைமை தொடர்பாக எந்தவொரு தொலைநோக்கின் அடிப்படையிலான திட்டத்தையும் முன்னைய அரசு கொண்டிருக்கவில்லை. ஆகவே, ஏனைய இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவது தொடர்பாக மாற்றுத் திட்டம் ஒன்றை கம்யூனிஸ்ட் கட்சி சமர்ப்பிக்கும் - என்றார் அவர்.

கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது என்ற தகவலை அவர் அடியோடு நிராகரித்தார். (ஒ-9)

---

### வெள்ள அச்சம் காரணமாக

# மேட்டுநிலக் காணிகளில் வெங்காயச் செய்கை

சண்டிலிப்பாய்,டிசெ.31

பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை ஆகிய பகுதிகளில் வெங்காயச் செய்கை மேட்டுநிலக் காணிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இம்முறை விவசாயிகளில் பலர் வெங்காயச் செய்கையில் ஆர்வமுடன் ஈடுபட்டுவருவதை அவதானிக்க முடிகின்றது. வழமையாக தைப்போக வெங்காயச் செய்கை ஜனவரி மாதத்திலேயே மேற்கொள்ளப்படுவது வழக்கம்

ஆனால், இம்முறை முன்கூட்டியே மேட்டுநிலங்களில் வெங்காயம் நடும்பணி நடைபெற்று வருகின்றது. மழை வெள்ளத்தால் அழிந்து விடக்கூடுமென்ற அச்சத்தினால் தாழ்வான காணிகளில் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்படவில்லை. இதே வேளை - மிளகாய்ச் செய்கையிலும் விவசாயிகள் இப்பகுதிகளில் அதிகளவில் ஈடுபட்டுவருகின்றனர். (ஒ-135)

---

# வர்த்தகர்களிடம் பணம் கேட்டு புலிகள் பெயரில் கடிதங்கள்

வவுனியா,டிசெ.31

வவுனியா நகரப் பகுதியிலுள்ள சிங்கள வர்த்தகர்கள் சிலருக்கு புலிகள் பெயரில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

சாதாரண வெள்ளைத் தாளிலான அக்கடிதத்தில், ஒரு லட்சம் ரூபா வீதம் வர்த்தகர்கள் தமக்குப் பணம் செலுத்தவேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் மரணதண்டனை விதிக்கப்படும் எனவும் புலிகள் குறிபபிட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

வர்த்தகர்கள் சிலர், புலிகளின் வவுனியா அரசியல் பணிமனையில் இதுபற்றி முறையிடச்சென்றபோது, தமக்கும் இந்தக் கடிதங்களுக்கும் எது வித தொடர்பும் இல்லையென்று புலிகள் தெரிவித்தனர். (ஐ)

---

### நாளை

மார்கழி 17
புதன்கிழமை
(01.01.2003)
திதி : சதுர்த்தசி
பின் இரவு 3.38வரை
நட்சத்திரம்: கேட்டை
மாலை 6.49 வரை.
சுபநேரம் : [illegible]
ராகுகாலம் : 12.29 - 1.59
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

ஆண்கள் பெண்களின் சாதுரியத்தை விரும்புகிறார் [illegible] பெண்களோ ஆண்களின் ஐஸ்வரியத்தை விரும்புகிறார்கள்.

---


# 'சொல்லாமலே' நிகழ்ச்சியை பயன்படுத்தி சிலர் விஷமத்தனம்

சக்தி எவ்.எம். வானொலிச் சேவையில் ஒலிபரப்பாகும் 'சொல்லாமலே' என்ற நிகழ்ச்சியைப் பயன்படுத்தி இங்கு சிலர் விஷமத்தனங்களில் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது.

முன் அறிவிப்பு ஏதுமின்றி ஒருவருடன் தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு-தெரிந்தவர்போன்று உரையாடுவதே 'சொல்லாமலே' நிகழ்ச்சியாகும்.

யாழ்ப்பாணத்தில் தொலைபேசி வசதியுள்ள வீடுகளையும் அங்குள்ளவர்களையும் தெரிந்துகொண்டு, மேற்படி நிகழ்ச்சிப் பாணியில் விஷமிகள் சிலர் தொலைபேசிமூலம் உரையாட முற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பாலும் இளம் பெண்கள் உள்ள வீடுகளின் தொலைபேசிகளே விஷமிகளின் இலக்காவதாகக் கூறப்படுகிறது.(ஒ)



மாத்தளை நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சித் அலுவிகார, தம்புள்ள பிரதேச சபைத் தலைவர் கே.ஜீ. சிறிசேன ஆகியோர் அடங்கிய குழுவினர் யாழ்ப்பாணம் வந்திருந்தனர். அக்குழுவினர் நேற்றுமுன்தினம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு வந்தபோது எடுக்கப்பட்ட படம்.

*(படம்:வசந்தன்)*

---

### வலி.வடக்கு பிரதேச சபையின்

# மின்சாரத் தொழிலாளர்கள் சம்பளம் குறித்து முறைப்பாடு

## மனித உரிமை ஆணைக்குழுவிடம்

வலி.வடக்குப் பிரதேச சபையின் கீழ் மின்சாரத் தொழிலாளர்களாகப் பணியாற்றிவரும் 10 பேர் கடந்த பத்து மாதங்களாகத் தமக்கு சம்பளப் பணம் வழங்கப்படவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மின்சாரத் தொழிலாளர்களாக பணியாற்றி வரும் தமக்கு, 1998ஆம்ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி நியமனம் வழங்கப்பட்டதாகவும் -

அப்போது நிரந்தர நியமனமாகவே வழங்கப்பட்டபோதும் தற்பொழுது ஆளணி வெற்றிடம் இல்லை என்று கூறித் தமது சம்பளப் பணம் தரப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் - முறைப்பாட்டில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாகத் தாம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உட்படப் பலருக்கும் தெரியப்படுத்தியபோதும் தமக்கு உரிய தீர்வு கிடைக்கவில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவர்களின் முறைப்பாடு தொடர்பாகத் தாம் பிரதேச சபைத் தலைவரிடம் விளக்கம் கேட்டுக் கடிதம் அனுப்பிவைக்கவுள்ளதாக ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பாளர் ஆர்.பி.சந்திரசேகர தெரிவித்தார். (ஒ-10)

---

# ஆஸ்துமா நோயைக் குணப்படுத்த ஆயுர்வேத மருந்து கண்டுபிடிப்பு!

ஆயுர்வேத வைத்தியர் ஒருவர் ஆஸ்துமா நோயைக் குணப்படுத்து வதற்கான மருந்து ஒன்றை வெற்றிகரமாகக் கண்டுபிடித்துள்ளார்.

பலவருட ஆராய்ச்சியின் பின்னர் பாரம்பரிய முறைப்படி இந்த மருந்தைத் தாம் கண்டுபிடித்தார் என ஹொரணையைச் சேர்ந்த டாக்டர் என்.சுகததாச தெரிவித்தார்.

இந்தப் புதிய மருந்தைப் பயன்படுத்திய நோயாளிகளுக்கு. ஒரு மாதத்துக்குள் பூரண சுகம் ஏற்பட்டுள்ளது. சுபாசினி என்ற பெயரைக் கொண்ட இந்த மருந்துக்கான விநியோக உரிமையைக்கோரி பல வெளிநாடுகள் கொள்வனவுக் கட்டளைகளை அனுப்பிவைத்துள்ளன என்று டாக்டர் சுகததாச மேலும் தெரிவித்தார். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் வருட நினைவஞ்சலி

திருமதி
**குயின்ரிலன் அனஸ்ரீன்**



**ஆண்டொன்று சென்றதம்மா**
**ஆருயிரே எமைப் பிரிந்து**
**நூறாண்டு சென்றாலும்**
**நீங்கிடுமோ உன் நினைவு!**

என்றும் நினைவில் வாழும்:
பிள்ளைகள், சகோதர
சகோதரிகள்.

**மண்ணில்: 07.05.1956**
**விண்ணில்: 31.12.2001**

தகவல்:
தியாகு மணியம்மா,
*பாஷையூர், யாழ்ப்பாணம்.*

(12470)

## ஈரவிழிகளுடன் ஈராண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 27 | 23 |
| - | - |
| 08 | 12 |
| - | - |
| 1949 | 2000 |

**திருமதி சந்திரன் அன்னலீலா**

**திதி: 31.12.2002**

*பாலுடன் சேர்த்து பாசம் பகிர்ந்தாய் - அம்மா*
*அன்புடன் குழைத்து அறிவு தந்தீர்கள் - அம்மா*
*அன்பான எம் அம்மாவே!*
*கண்ணீரில் கரைகிறோம் - கதி கலங்கி*
*தவிக்கிறோம் அம்மா!*
*ஈராண்டு ஓடி மறைந்தாலும் உங்கள்*
*நினைவுகளில் தவிக்கிறோம் அம்மா!*
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி!*

*தகவல்: சந்திரன்*
*நவாலி அரசடி,*
*மானிப்பாய்.*

உங்கள் பிரிவால் வாடும்:
சந்திரன் (கணவர்), பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(12252)

## பாடசாலை மினிபஸ் சேவை

தென்மராட்சி,டிசெ.31

தென்மராட்சி தனியார் மினிபஸ் சங்கத்தினர் எதிர்வரும் ஜனவரி இரண்டாம் திகதி தொடக்கம் புத்தூர்ச் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம வரையிலான பாடசாலை மினிபஸ் சேவையினை நடத்தவுள்ளனர்.

இந்த மினிபஸ்களில் பிள்ளைகளை அனுப்பவுள்ள பெற்றோர்கள் சாவகச்சேரி டச்சு வீதியிலுள்ள சங்க அலுவலகத்தில் பெயர்களைப் பதிவு செய்யுமாறு சங்கத் தலைவர் மெ.அற புதராசா அறிவித்துள்ளார். (ஐ-117)

## அபிவிருத்தி ஆண்டாக 2003 பிரகடனம்

2003ஆம் ஆண்டை அபிவிருத்தி ஆண்டாகப் பிரகடனப்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. பல அபிவிருத்தித் திட்டங்களை அடுத்த ஆண்டில் மேற்கொள்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாக மின்சக்தி, எரிபொருள் அமைச்சர் கருஜயசூரிய தெரிவித்தார்.

பேருவளைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள காமினி அத்துக்கோறளை கிராம வீடமைப்புத்திட்டத்தை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (ஐ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 17 | 02 |
| - | - |
| 09 | 12 |
| - | - |
| 1927 | 2002 |

**அமரர் இராசையா செல்லையா**

*(இளைப்பாறிய வருமானவரி உத்தியோகத்தர்)*

**திதி: 31.12.2002**

*அறிவூட்டி எங்களைப் பாசமுடன் வளர்த்த*
*அப்பாவே! பண்புக்கோர் இருப்பிடமாய்*
*அவனியிலே வாழ்ந்த அன்புத் தெய்வமே!*
*கார்த்திகைத் திங்களில் திடீரென நித்திரையில்*
*மீளாத்துயில் கொண்ட அப்பாவே! எப்போதும்*
*உங்கள் முகம் எங்கள் முன் தோன்றுது.*
*உடலால் எமைவிட்டுப் பிரிந்தாலும் உங்கள்*
*நினைவுகள் என்றும் எமைவிட்டு மறையாது.*
உங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரசாந்தி,*
*சேச் லேன், கொக்குவில்.*

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(12288)


நத்தார், புதுவருட தினத்தை முன்னிட்டு

சிறப்புத்தள்ளுபடி விலையில்!



நவநாகரிக சேட், T.சேட், கோட்சூட், சூட் வகைகள், டெனிம், சோக்கோ ரவுசர் வகைகள், ரவுசர் துணிவகைகள், ஜம்பர் வகைகள், பட்டுச்சாறிவகைகள், பேபிகவுண் வகைகள், ஸ்கேட் & பிளவுஸ் வகைகள், சல்வார்கமீஸ் வகைகள், கவுண் வகைகள், நவீன டிசைன்களில் பலரக சாறி வகைகள் அனைத்தையும் கிறிஸ்மஸ், புதுவருட அதிரடித் தள்ளுபடியில் பெற்றிட



**மிலேனியம் பெஷன்**

(பொம்பே பஜார்) *(மலாயன் கபே முன்பாக)*

(C/25527) 10, மின்சார நிலைய வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்.



**சுடர் ஒளி**

31-12-2002 இதழில்

விலை 14/-

வாசிக்கும் நெஞ்சங்களை யோசிக்கவைக்கும் ஒரே பத்திரிகை




2003 வர்ணக் கலண்டர்

நிபந்தனை இல்லாத பேச்சுக்கு
நிபந்தனை விதித்த படையினர்

முஸ்லிம் மக்களின் அரசியல்
அபிலாஷைகளை குழிதோண்டிப்
புதைக்கும் கட்சிப் பூசல்

சீரழிந்துபோகும் திட்டங்களும்
பேரழிந்துபோகும் பட்டங்களும்
-தேரடி.

கடை நடத்துவது எப்படி?
-நகைச்சுவை.

மற்றும் இணையத்தளங்களில் இருந்து,
பித்தன் பதில்கள், இலவச மருத்துவ
ஆலோசனை, விளையாட்டு, சினிமா,
துணுக்குகள் உட்பட பல்வேறு அம்சங்கள்.

(C/257453)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். கல்வித் துறையில் மறுமலர்ச்சி ஏற்படுமா?

தற்போது நடைமுறையிலுள்ள புதிய கல்விச் சீர்திருத்தத்தில் எஸ்.பி.ஏ. எனப்படும் பாடசாலை மட்டக் கணிப்பீடு மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. வெறுமனே எழுத்துப் பரீட்சையில் கேட்கப்படும் கேள்விகளுக்கு சரியான விடைகளை ஒப்புவிக்கும் புத்தகப் பூச்சிகளான மாணவ சமூகத்தை உருவாக்காது சுயசிந்தனையுள்ள பல்துறை ஆற்றலுடன் நல்லொழுக்கம் மிக்க மாணவ சமூகத்தை உருவாக்குவதற்கு பாடசாலை மட்டக் கணிப்பீடு அடித்தளமிடுவதனால் உலகில் முன்னேற்றம் அடைந்த பல நாடுகளில் இந்த முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஒரு மாணவனின் பெற்றோர், பாதுகாவலர்களை விட மாணவனின் வியத்தகு திறமைகள் உடல், உளக் குறைபாடுகள், தனி மனித பிரச்சினைகள், நடத்தை மாற்றங்கள் போன்றவற்றை பாடசாலை மட்டக் கணிப்பீடுமூலம் ஆசிரியர்கள் விரைவாக அறிந்து பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்தும் நிலை உலகநாடுகள் பலவற்றில் தற்போது நடைமுறையில் உள்ளது. இதனால் மாணவர்களின் உடல் உளக் குறைபாடுகளுக்கு விரைவான தீர்வு கிடைக்கிறது. அத்துடன், மாணவர்களின் விசேட திறமைகள் மேலும் வளர்க்கப்படுவதற்குரிய ஊக்கங்கள் இளமைக் காலத்திலேயே பெற்றோர், ஆசிரியர் என்ற கூட்டு அமைப்புமூலம் வழங்கப்படுகிறது. இதனால் தனித்துவ ஆற்றல் மிக்க மாணவ சமூகம் பாடசாலைக் கல்வி முறைமூலம் தோற்றுவிக்கப்படுகின்றது.

அத்துடன், சந்தர்ப்ப சூழ்நிலைகளால் நெறிபிறழ்கின்ற மாணவர்கள் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு முறையினால் மிக விரைவாக ஆசிரியர்களினால் இனங்காணப்பட்டு உடனுக்குடன் தகுந்த ஆலோசனைகளும் வழிகாட்டுதல்களும் வழங்கப்படுவதன்மூலம் நல்வழிப்படுத்துவதில் டென்மார்க், நோர்வே போன்ற நாடுகள் மிகக்கூடுதலான நன்மைகளைப் பெற்றுள்ளன.

எனவேதான், இலங்கையிலும் தறபோது புதிய கல்விச் சீர்திருத்தத்தின்படி பாடசாலை மட்டக்கணிப்பீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த சில வருடங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால், எமது குடாநாட்டுப் பாடசாலைகளில், பாடசாலை மட்டக் கணிப்பீடு என்ற போர்வையில் உண்மையில் நடப்பது என்ன?




அதிக எண்ணிக்கையான கணிப்பீட்டுப் பரீட்சைகளை மிகவிரைவாக நடத்தி, அழகான அப்பியாசப் புத்தகத்தில் புள்ளிகளைப் பதிந்து சிவப்பு, பச்சை எனப் பல வர்ண நிறந்தீட்டுவதுடன் தமது கடமை முடிந்துவிட்டது எனக் கருதும் பெரும்பான்மையான ஆசிரியர்களே தற்போது உள்ளனர்.

அத்துடன், புதுமணப் பெண்ணை அலங்கரிப்பதுபோல் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுப் பதிவுப் புத்தகத்தை மினுமினுப்பான பலவர்ணக் காகிதங்கள், கலர்ப் பென்சில்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி அலங்கரிப்பதற்காக சில மீத்திறன் மிக்க மாணவர்களின் பாடசாலை நேரம் முழுவதையும் உறிஞ்சிக்கொள்ளும் ஆளுமைமிக்க ஆசிரியர்களும் குடாநாட்டுக் கல்விச் சமூகத்தில் தற்போது கூடுதலாக உள்ளனர் என்பது யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை ஆகும்.

ஏனெனில், வகுப்பறைக் கற்பித்தலை மேற்பார்வை செய்யவருகின்ற உயர் அதிகாரிகளான சில ஆசிரிய சேவைக்கால ஆலோசகர்களும் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுப் பதிவுப் புத்தகத்தின் அலங்காரத்தைப் பரீட்சிக்கின்றார்களேயன்றி, வகுப்பறைக்குச் சென்று மாணவர்களுடன் கலந்துரையாடி மாணவர்களின் அடைவு மட்டத்தைப் பரீட்சிப்பது குறைவு.

அதாவது, ஓர் ஆசிரியரின் கற்பித்தல் திறனை பாடசாலை மட்டக் கணிப்பீட்டுப் பதிவுப் புத்தகத்தின் அலங்காரத்தினை மட்டும் அளவுகோலாகப் பயன்படுத்தி மதிப்பிடுகின்ற உயர் அதிகாரிகளான சில ஆசிரிய ஆலோசகர்கள், பலவர்ண அலங்காரத்துடன் கணிப்பீட்டுப் பதிவுப் புத்தகத்தைப் பேணுகின்ற ஆசிரியர்களே மிகச் சிறந்த ஆசிரியர்கள் என்று புகழாரம் சூட்டி விட்டு வகுப்பறைப் பக்கம் தலைகாட்டாது பாடசாலையை விட்டு மறைந்து விடுகின்றனர். இவர்களிடம் இருந்து பொருத்தமான ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் எதிர்பார்த்துக் காத்துநிற்கும் ஆசிரியர்களுக்கு இறுதியில் ஏமாற்றமே பரிசாகக் கிடைக்கின்றது.

எனவே, தற்போதைய குடாநாட்டுக் கல்விச் சமூகத்தில் அலங்காரமான பதிவுகளுக்கே கூடிய முக்கியத்துவம் கொடுக்கப்படுவதனால் காலை நற்சிந்தனைகள், நல்லொழுக்க அறிவுரைகள், நூலகப் பயன்பாடு போன்ற சில அவசியமான செயற்பாடுகள் எமது பாடசாலைகளை விட்டு வெகுதூரம் சென்று மறைந்து விட்டன. ஒரு மாணவனின் தனிமனித ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து முழுமையான மனிதனாக மாற்றுவதற்கு மிக அத்தியாவசியமான காலை நற்சிந்தனைகள், நல்லொழுக்க போதனைகள் போன்ற செயற்பாடுகளுக்கு நேரம் போதாது என்ற காரணத்தைக் கூறி சில பாடசாலை நிர்வாகங்கள் தப்பித்துக்கொள்கின்றன. காரணம், மாணவர்களின் தனிமனித இயல்புகள் என்பவற்றை கவனத்திற்கொள்ளாது குறிக்கப்பட்ட பாடவிடயம் மாணவர்களுக்கு விளங்கினால் என்ன? விளங்காவிட்டால் என்ன? கணிப்பீட்டுப் பரீட்சைகளைக் கூடிய எண்ணிக்கையில் விரைவாக நடத்தி, அலங்காரமான முறையில் புள்ளிகளைப் பதிந்து சமர்ப்பிப்பதன் மூலம் மேலதிகாரிகளிடம் 'கடமை வீரர்கள்' என்ற நற்பெயரை வாங்குவதையே தமது உயர்ந்த இலட்சியமாகக் கொண்டு எமது குடாநாட்டு ஆசிரியர்கள் பலரும் தற்போது இயங்கிக் கொண்டிருக்கின்றனர். இதன் பிரதிபலிப்பே ஒவ்வொரு கல்வியாண்டின் இறுதியிலும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் தமது எதிர்காலம் சூனியமாக்கப்பட்ட நிலையில் நடுத்தெருவில் விடப்படுகின்றமை ஆகும். அத்துடன், நல்லொழுக்கம் பற்றி அறியாத மனிதர்கள் கூட்டம் எமது சமூகத்தில் அதிகரிக்கின்றமையும் இதன் விளைவுகளில் ஒன்றாகும்.

உண்மையில் கலை, பண்பாடு, கலாசாரம், பொருளாதாரம் ஆகியவற்றில் நன்கு முன்னேறியுள்ள உலக நாடுகள் பலவற்றின் கல்விமான்களினால் நன்கு வரவேற்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்ற பாடசாலை மட்டக் கணிப்பீட்டு முறையானது எமது கல்விச் சமூகத்தின் சில சந்தர்ப்பவாதிகளினால் 'பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காக முடிந்த' கதையாகியுள்ளமை மிகவும் மனவருத்தத்துக்குரிய விடயமே. பரந்துபட்ட சமூகநலன் நோக்கில் எல்லையற்ற கடமைப் பொறுப்புடையவர்கள் எனச் சமூகத்தினால் போற்றப்படுகின்ற ஆசிரியர்கள், தற்போது கணிப்பீட்டுப் பரீட்சை நடத்துதல், புள்ளிகளைப் பதிதல், வர்ணம் தீட்டல், பதிவுப் புத்தகத்தை நன்கு அலங்கரித்தல் ஆகிய குறுகிய எல்லைக்குள் தமது கடமைப் பாங்கை முடித்துக்கொள்வதனால் நூலகங்களில் உள்ள பல்வேறு வகைப்பட்ட நூல்களை, சஞ்சிகைகளை நன்கு வாசித்துத் தமது ஆசிரிய வாண்மையை விருத்திசெய்கின்ற செயற்பாடும் தற்போது எமது கல்விச் சமூகத்தில் குறைந்துகொண்டு வருகின்றது.

அத்துடன், ஆசிரிய வாண்மையை விருத்தி செய்வதற்காக ஆசிரிய சேவைக்கால ஆலோசகர்கள் போன்ற உயர் அதிகாரிகளால் நடத்தப்படுகின்ற கருத்தரங்குகள், செயலமர்வுகள் போன்றவையும் கூடுதலாக ஏனோதானோ என்ற நிலையிலேயே இங்கு நடத்தப்படுகின்றன. அதாவது, முன்கூட்டியே நன்கு திட்டமிடப்பட்டு ஆசிரியர் செயலமர்வுகள் நடத்தப்படுவது மிகக் குறைவு.

சில உணவுச்சாலைகளில் வடை போன்றவை விற்காதுவிட்டால் அதைக்கொண்டு அடுத்தநாள் காலையில் திடீர் தோசை தயாரிக்கப்படுவது போன்று திடீர் ஆசிரியர் செயலமர்வுகளே இங்கு கூடுதலாக நடத்தப்படுகின்றன.

உதாரணமாக, கடந்த நவம்பர் 28ஆம் திகதி யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் சங்கீதம் கற்பிக்கும் ஆசிரியர்கள் திடீரென அழைக்

அ.கந்தமனோகரன்
(இளைப்பாறிய ஆசிரியர்)

கப்பட்டு திடீர் ஆசிரியர் செயலமர்வு நடத்தப்பட்டமை திடீர் தோசைக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு ஆகும். ஏனெனில், பாடசாலைத் தவணையின் இறுதிக்காலம் மட்டுமன்றி கல்வியாண்டின் இறுதிக்காலமுமாகிய மேற்குறிப்பிட்ட தினமானது மாணவர் தேர்ச்சி அறிக்கை தயாரித்தல் போன்ற முக்கிய செயற்பாடுகள் பாடசாலைகளில் நடைபெறுவதன் காரணமாக ஆசிரியர்களுக்கு மிக முக்கியமான தினமாக இருந்தபோதிலும் ஆசிரியர் செயலமர்வு நடத்தப்பட்டமை உயர் அதிகாரிகளின் எதேச சதிகாரத் தன்மையையே தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

அத்துடன், விரைவாக மாறிவரும் அறிவியல் உலகின் புதிய சிந்தனைகளை அறியும் ஆவலுடன் ஆசிரியர் செயலமர்வுகளுக்குச் செல்கின்ற ஆசிரியர்களுக்கு பெரும்பாலும் ஏமாற்றமே கிடைக்கின்றது. ஏனெனில், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான 'நித்திய மேளங்களே' ஆசிரியர் செயலமர்வுகளில் மீண்டும் மீண்டும் மாறி மாறி ஒலிக்கின்றன.

அதாவது, தேசிய கல்வி நிறுவகம், பல்கலைக்கழகங்கள் போன்ற உயர்கல்வி நிறுவனங்களின் துறைசார் நிபுணர்கள் அழைக்கப்பட்டு, ஆசிரியர் செயலமர்வுகள் நடத்தப்படுகின்றமை குடாநாட்டில் மிகக் குறைவு.

அத்துடன், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், முதன்மை ஆசிரியர்கள் போன்ற உள்ளகப் பதவி உயர்வுகள் வழங்கப்படும்போது ஆசிரியர்களின் கல்வித் தகைமை, தொழில் தகைமை, ஆசிரியவாண்மை விருத்தி, கற்பித்தல் அனுபவம் போன்ற தகைமைகளிலும் பார்க்க அவரின் உறவினர், இவரின் நண்பர் என்ற தகைமைகளுக்கே கூடுதலான முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. அதாவது, பகிரங்கமாக விண்ணப்பம் கோரப்பட்டு, ஆசிரிய சேவைக்கால ஆலோசகர்கள் போன்ற கல்வித் துறைசார் உள்ளக நியமனங்கள் வழங்கப்படுவது குடாநாட்டில் மிகக் குறைவு. அடுத்த வீட்டு ஆடு வந்து பயிரை மேய்ந்தால் அதனைத் துரத்திக் கலைத்துப் பயிரைக் காப்பாற்றலாம். ஆனால், காவலுக்கு நிற்கின்ற வேலிகளே பயிரை மேய்ந்தால் பயிரைக் காப்பாற்றுவது சாதாரண மனித இயல்புக்கு அப்பாற்பட்ட விடயம்.

ஆகவே, எதிர்வரும் ஜனவரி 2 ஆம் திகதி ஆரம்பிக்கின்ற புதிய கல்வியாண்டிலாவது யாழ்.கல்வித் துறையில் புதியதொரு மறுமலர்ச்சி ஏற்படுமா? ★

# ஏ-9 வீதி ஊடாக வருகிறது 'டெங்கு'!

**யாழ்.**குடாநாட்டில் போர் ஓய்ந்துவிட்டது. போரினால் ஏற்பட்டுவந்த அவலச்சாவுகள் தடுக்கப்பட்டுள்ளன. எனினும், 'டெங்கு' இனந்தெரியாத வைரஸ் காய்ச்சல் போன்றன ஏற்படுத்தும் அவலச்சாவுகளைத் தடுக்க முடியவில்லை.

வழமையைவிட இம்முறை நுளம்புகளின் பெருக்கம் குடாநாட்டில் அதிகரித்துள்ளது. மழையும் அதிகமாகவே

**செய்திக் கட்டுரை**

பொழிந்துள்ளது. மழைக்கும் நுளம்புக்கும் என்ன தொடர்பு?

நுளம்புகள் நீரிலேதான் இனப்பெருக்கம் செய்கின்றன. நீர் அதிகமாகத்தேங்கி நிற்கும் குளம், கடல், குட்டை என்பவற்றில் நுளம்புகள் இனப்பெருக்கம் செய்வதில்லை. ஏனெனில், அங்கு மீன்போன்ற உயிரினங்களினால் அவற்றின் முட்டைகள் உண்ணப்பட்டுவிடும்.

இதனால், ஆங்காங்கே வீதிகளிலும், வீடுகளிலும் கழிவுப்பொருள்களிலும் புதைந்தும், புதையாமலும் பரந்துகிடக்கும் பொலித்தீன் தாள்களிலும், பைகளிலும் தரித்து நிற்கும் சிறிய அளவிலான நீரிலும் நுளம்புகள் தமது இனப்பெருக்கத்தை மேற்கொள்கின்றன.

இவ்வாறு பெருகும் நுளம்புகள், தாவரத்தின் சாற்றினையும் மனிதரின் இரத்தத்தினையும் தமது உணவாகக்கொள்கின்றன. நுளம்புகள் மனிதனின் உடலில் இருந்து வரும் நாற்றத்தை துல்லியமாக உணரக்கூடியவை. அதனாலேயே அதிகளவில் நுளம்புகள் மனிதனை நாடி வருகின்றன. மனிதனை நாடிவரும் நுளம்புகளே டெங்கு, மலேரியா நோய்க் கிருமிகளை மனித உடலில் செலுத்திவருகின்றன.

இலங்கையைப்பொறுத்தவரையில் நுளம்பினால் மலேரியா, யானைக்கால், டெங்கு போன்ற நோய்களே அதிகளவில் பரப்பப்பட்டுவருகின்றன. ஆனால், குடாநாட்டில் நுளம்பின் அச்சுறுத்தலாக இதுவரை பாரிய அளவில் இருந்துவந்தது மலேரியா மட்டுமே.

குடாநாட்டில் மலேரியாவைப் பரபபும் நுளம்புக் காவிகளும், டெங்குவைப் பரப்பும் நுளம்புக் காவிகளும் இருந்துவருகின்றபோதிலும், டெங்குகளைப் பரப்பும் நுளம்புக் காவிகள் அந்தக் கிருமிகளைத் தன்னுடலில் கொண்டவையாக இதுவரை காலமும் இருக்கவில்லை. அப்படியாயின், டெங்கு நோயை ஏற்படுத்தும் கிருமிகளை எவ்வாறு அந்த நுளம்புகள் பெற்றிருக்கமுடியும் என்ற கேள்வி எழுகிறது. ஏ-9 பாதை திறந்த பின்னர், தெற்கிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு படையெடுக்கும் பயணிக்ளினதும் வியாபாரிகளினதும் எண்ணிக்கை இப்போது அதிகரித்துள்ளது. அதற்கும் டெங்குக்கும் என்ன தொடர்பு என்று கேட்கமுடியும்.

இதுவரைகாலமும் டெங்குக் காய்ச்சல் என்பது தெற்கிலேயே அறியப்பட்டதொன்றாக இருந்தது. அதிகமாகத் தெற்கில் வாழும் மக்களே டெங்குக் காய்ச்சல் நோயினால் பீடிக்கப்படுபவர்களாகவும் மரணத்தை எதிர்நோக்குபவர்களாகவும் இருக்கின்றனர்.

இந்தநிலையில், தெற்கிலிருந்து வரும் ஒருவர் ஏற்கனவே டெங்கு நோய்க் கிருமியை உடலில் கொண்டவராக இருப்பின் குடாநாட்டில் பெருக்கமடைந்திருக்கும் - அதேவேளை, டெங்குநோய்க் கிருமியை பெற்றுக் கொள்ளத் தயாராக இருக்கும் - நுளம்புக் காவிகள் விரைவிலேயே அதனைப்பெற்று, டெங்குக் காய்ச்சலை தீவிரமாகப் பரப்பிவிடும் நுளம்புகளாக மாறிவிடுகின்றன. இத்தகைய நுளம்புகளாலேயே இங்கு இப்போது டெங்குக் காய்ச்சல் வேகமாகப் பரப்பப்பட்டுவருகின்றது. அதனோடு இணைந்த வகையில், இனந்தெரியாத வைரஸ் காய்ச்சலும் கூடவே மக்களை பீதிக்குள்ளாக்கியிருக்கிறது.

இதில் மிகவும் வேதனைக்குரிய விடயம் என்னவெனில், இந்த நோய்கள் பெரும்பாலும் இளம் பராயத்தினரையே தாக்குகின்றன. குறிப்பாக 15 - 29 வயதிற்கு உட்பட்டவர்களே

சத்தியன்

இந்த நோயின் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர். போரினால் இளைஞர், யுவதிகள் அழிவது நிறுத்தப்பட்டாலும், இந்தக் கொடிய நோயினால் இளம்பராயத்தவர் மரணமாவதைத் தவிர்க்கமுடியாது. ஏனெனில், மலேரியாவைப்போல் டெங்கு நோயைக் குணப்படுத்தமுடியாது. அதிலும் யாழ. போதனா வைத்தியசாலையில் ஓரளவுக்கேனும் அதற்குரிய வசதிகள் அமைக்கப்படவில்லை. ஒருவர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார் என்பதுகூட அவரின் இரத்தம் கொழும்புக்கு மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டு அதன் பெறுபேறுகள்மூலமே அறியமுடிகிறது.

குணப்படுத்தவேமுடியாத இந்த நோய் பீடிக்கப்பட்ட ஒருவரில் அதிக இரத்தப் போக்கை, அதாவது குருதி உறையாத நிலையையும், மூளை, இதயம் போன்ற பகுதிகளில் கட்டுப்படுத்த முடியாததும் அறிய முடியாததுமான தன்மையில் இரத்தப் போக்கையும் ஏற்படுத்துவதால் நிச்சயமாக மரணமே முடிவாகின்றது.

டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்புகள் மாலை 5மணிமுதல் இரவு 7மணிவரையே சூழலில் உலவுகின்றன. மலேரியாவை ஏற்படுத்தும் நுளம்புகள் இரவில்தான் உலவுகின்றன. எனவே, மிக முக்கியமானது மாலை நேரத்தில் எம்மை நுளம்புகள் தீண்டாமல் பார்த்துக்கொள்வது. அதனிலும் சிறந்தது என்னவென்றால், டெங்கு நுளம்புகள் ஓர் இடத்தில் காணப்படுமாயின் அது அந்த இடத்தில் இருந்து அரைமைல் சுற்றுவட்டாரத்திலேயே பயணிக்கக்கூடியது. அதனால், ஒவ்வொருவரும் தனது வீட்டில் இருந்து அரை மைல் சுற்றாடலை சுகாதாரமானதாகப் பேணுவதன்மூலம் சுற்றுச் சூழலில் நுளம்புகள் பெருகாத வண்ணம் தடுக்கமுடியும். ✪

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கைச் சேர்ந்த P.பவித்திரா என்பவருடைய தே.அ.அட்டை (இல. 788584571V), வி.அ.அட்டை (இல. 0906024179) என்பன யாழ்.நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்து உதவவும். (12508)

## வீடு வாடகைக்குத் தேவை

அரசாங்க உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றும் குடும்பத்தினருக்கு யாழ்நகரப் பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை (முற்பணம் வழங்கப்படும்). தொடர்பு: 024-22922. (12514)

## வீடு தேவை

சித்தன்கேணி, சங்கானை, வட்டுக்கோட்டை, மானிப்பாய் ஆகிய இடங்களில் சகல வசதிகளும் கொண்ட வீடு விலைக்கு உடன் தேவை. தொடர்பு: விள. இல.1740, மே/பா., உதயன். (12495)

## விற்பனைக்கு

56... தொடரிலக்கமுடைய LITE ACE 2C TOYATA எஞ்ஜின் பொருத்தப்பட்ட AC வளமுள்ள வான் மற்றும் 94 ஸ்ரீயைக் கொண்ட CD TWIN மோட்டர் சைக்கிளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நல்ல சமாரியான் காரியாலயம், கோண்டாவில் கிழக்கு. T.P.: 021 - 222 - 2488, 021 - 222 - 3820. (12450)

BROILERS, சேவல், கல்பேட்ஸ் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம்செய்து தரப்படும். தொடர்பு:- சே.கிருஸ்ணகுமார், விதானைவளவு, பொன்னாலை வீதி, மானிப்பாய் (பிப்பிலிச் சந்திக்கு முன்பாக). (12304)

புறொயிலர், கல்பேட்ஸ் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து வேண்டிய நிறைகளில் எவ்வேளையிலும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:Y.A.சுரேஸ் (கிராமக் கோட்டுச் சந்தியிலிருந்து 150m உள்ளே), பருத்தித்துறை. (12219)

## பொங்கலையொட்டி ஞாயிறு தினங்களில் கடைகள் திறப்பு

தென்மராட்சி,டிசெ.31

எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தையொட்டி தென்மராட்சி கைத்தொழில் வணிகர் மன்றங்களின் ஒன்றிய எல்லைக்குட்பட்ட அனைத்து வணிக நிலையங்களும் ஞாயிற்றுக்கிழமைகளான எதிர்வரும் ஐந்தாம் மற்றும் பன்னிரண்டாம் திகதிகளில் வர்த்தக நடவடிக்கைகளுக்காகத் திறந்திருக்கலாமென ஒன்றியத் தலைவர் ந.சற்குணராசா அறிவித்துள்ளார். (ஒ-117)

## வீடுகள் விற்பனைக்கு

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இரண்டு வீடுகள் சகல வசதிகளுடனும் உடனடிப் பாவிப்பிற்கேற்றவாறு விற்பனைக்குண்டு. பகல் 10மணி தொடக்கம் பிற்பகல் 4மணிவரையும் கீழ்க்காணும் முகவரியில் தொடர்புகொள்ளலாம்.

இலங்கயன் பதிப்பகம்
234A (அச்சக வீதி),
K.K.S.வீதி, யாழ்ப்பாணம். (12516)

கொக்குவில் நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய
## பரிபாலன சபையினரின் அறிவித்தல்

எமது ஆலய உள்சுற்றுப் பிரகாரங்களுக்கு தீந்தை தீட்டுவதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது. தகுதியானோர் ஆலயத்தை நேரில் பார்வையிட்டு தங்கள் கூறுவிலைகளை 10.01.2003 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் செயலாளருக்குக் கிடைக்கக் கூடியதாகத் தபாலில் அனுப்பிவைக்கவும்.

திரு.சி.ஜெயபாலசிங்கம்,
செயலாளர்.

நந்தாவில்,
கொக்குவில். (12503)

# கண்ணீர் அஞ்சலி

எமது தர்மகர்த்தா சபையின் அங்கத்தவரான
*திரு. தி.வி.அருளானந்தம்*
(யாழ்.தேசிய சேமிப்பு வங்கி, உதவி முகாமையாளர்)
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி விசாகசுந்தரம் திரிபுரசுந்தரி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

- தர்மகர்த்தா சபை,
ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி கோயில்
*(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில்).*

*655, கே.கே.எஸ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.* (12513)

# அறிவித்தல்

நவீல்ட் பாடசாலை அடுத்த தவணை தொடர்ந்தும் சென். ஜோண்ஸ் அக்கடமியில் இயங்கும்.

புதிதாகப் பாடசாலையில் சேரும் மாணவர்களின் விண்ணப்பங்கள் 31.01.2003வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பருவகாலச் சீட்டு எடுக்கும் மாணவர்கள் 03.01.2003 அன்று அலுவலகத்தில் தொடர்புகொள்ளவும்.

அதிபர்,
நவீல்ட் பாடசாலை.

*கைதடி.* (12511)



நெஞ்சை விட்டகலா
## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

# பொன்னையா கமலரூபன்

*(விரிவுரையாளர். தமிழ்த்துறை. யாழ்.பல்கலைக்கழகம்)*

*கமலத்தின் ரூபனே! என்றும் அழியாக் காவியமே!*
*ஆண்டிரண்டு சென்றதோ – எங்கள்*
*ஆதார தெய்வமே உமைப் பிரிந்து.*
*உற்றார் ஊராரைத் தவிக்கவிட்டு*
*கற்றோர் மற்றோரை கலங்கவிட்டு*
*பாரினைவிட்டே பல தூரம் சென்றதேனோ?*
*நித்தம் உன் நினைவுகளைச் சுமந்தபடி வாழ்கின்றோம்.*
*விழிகள் தேடும் இடமெல்லாம் உந்தன்*
*விம்பந்தானே தெரியுதையா!*
*ஆயிரம் ஆண்டு சென்றிடினும் ஆறாதையா உன் நினைவு.*

- குடும்பத்தினரும்,
கமலரூபன் நினைவுச் சபையும்.

*கரவெட்டி மத்தி.* (12515)

# 2003
# ஆசீர்வாத ஆராதனை

**"இதோ நான் (கர்த்தர்) புதிய காரியத்தைச் செய்கிறேன்."**
*ஏசாயா 43:19"*

- ❖ தேவனைத் துதிக்கும் பாடல்கள்
- ❖ தேவனை மகிமைப்படுத்தும் சாட்சிகள்
- ❖ தேவ வழி நடத்துதலுக்கான செய்தி
- ❖ தேவ திட்டம் அறிய வாக்குத்தத்தம்
- ❖ தேவனுக்காக வாழ அர்ப்பணிப்பு

இடம் : கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்
இல.89, பிறவுண் வீதி, கொக்குவில்
நாள் : இன்று (31.12.2002) செவ்வாய்க்கிழமை
நேரம் : இரவு 10.00 மணி

இரவு 8.30 மணிக்கு "அற்புதங்கள் எட்டு" வீடியோ படக்காட்சி காண்பிக்கப்படும்.

புதுவருட ஆராதனை (01.01.2003)
காலை 7.30 மணிக்கு - அளவெட்டி மத்தி, அளவெட்டி.
9.00 மணிக்கு - உடுவில் வீதி, மானிப்பாய்.


*வாருங்கள், தேவ ஆசீர்வாதம் பெறுங்கள்.*

உங்கள். ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சி நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்.

*கல்வாரிக் குடும்பம்,*
*89, பிறவுன் வீதி, கொக்குவில்.* (12519)

# கண்ணீர் அஞ்சலி

A.M.T. ரான்ஸ்போட் சேவிஸ் நிறுவன அதிபர் மு.தனநாயகம்
அவர்களின் அன்புத் தந்தையார்



## அப்பாக்குட்டி முருகேசு *(அ.மு.)*

புங்குடுதீவு கிழக்கு, 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் 79/6 W.A.சில்வா மாவத்தை, வெள்ளவத்தையில் வசித்தவருமான அப்பாக்குட்டி முருகேசு அவர்கள் 29.12.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானதையொட்டி மிகவும் துயரமடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

Manager and Staffs,
A.M.T. Transport Service,
Point Pedro Road, Irupalai Junction, Kopay.

Head Office Manager and Staffs,
A.M.T. Transport Service,
71, Shoe Road, Kotahena, Colombo. (12498)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்



இவ்வுலகில் 07 - 06 - 1914
இறையுலகில் 01 - 12 - 2002

## அமரர் புற்றிடங்கொண்டார் சுப்பிரமணியம்

(இளைப்பாறிய கிராமத் தலைமைக்காரர்,
முன்னாள் கிராமசபைத் தலைவர், வேலணை)

*தொண்டிற்கே தன்னைத் தந்த மண்டு புகழாளன்*
*எண்டிசையும் போற்ற இயல்பான தலைமை தாங்கி*
*வண்மையொடு செம்மையும் விருந்தும் காத்த*
*பண்பாளன் சுப்பிரமணியன் நிற்பான் நெஞ்சத்து நிறைந்து.*

இன்று (31.12.2002) செவ்வாய்க்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய, ஆத்மசாந்தி நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*261/6, கண்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*பிரிவுத்துயரால் வாடும்:*
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (12521)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய கிழக்கு முயற்சி தோற்ற காரணம் வேறு

# இலங்கையின் அமைதி நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும்!

## நோர்வே கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதி நம்பிக்கை



சுன்னாகம்,டிசெ.31

மத்திய கிழக்குச் சமாதான முயற்சிகளிலிருந்து இலங்கையின் சமாதான நடவடிக்கை வேறுபட்டது. ஆகவே, இது தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்ற நம்பிக்கையைத் தருகிறது.

- இவ்வாறு தெரிவித்தார் நோர்வே தொழிலாளர் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதி ரூனா மரியா பியரிக்.

புதிய ஜனநாயகக் கட்சி ஏற்பாடு செய்த 'சமாதான முன்னெடுப்புகளும் எதிர்கொள்ளும் சவால்களும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு யாழ். சிற்றி ஹோலில் நடைபெற்றது. புதிய ஜனநாயகக் கட்சித் தலைவர் இ. தம்பையா தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ரூனா மரியா பியரிக் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது:-

மத்திய கிழக்கு சமாதான ஒப்பந்தம் தோல்வியடைந்தமைக்கு காரணம் அது தனிப்பட்டவர்களின் சமாதான முயற்சியாக இருந்ததுதான். அதுமட்டுமல்ல அங்கு இஸ்ரேலினாலேயே தீர்வுகள் திணிக்கப்பட்டன. இலங்கையைப் பொறுத்தவரை இரு தரப்புகள் பேச்சில் பங்குகொள்கின்றன.

ஆகவே, இந்தச் சமாதான முயற்சி தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்ற நம்பிக்கையைத் தருகிறது. எமது கட்சி தொடர்ச்சியாக தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை ஆதரித்து வந்துள்ளது. தங்களுக்கான தீர்வு என்ன என்பதை தமிழ்மக்கள்தான் ஏனைய இலங்கை மக்களுடன் பேசித் தீர்வுகாணவேண்டும். அதுபற்றி நாம் கருத்துக்கூறுவது உள்விவகாரங்களில் தலையிடுவதாகும். இதுவரை நடைபெற்ற பேச்சுக்களில் நோர்வே நிதானமாக ஒத்துழைப்பு வழங்கியிருக்கிறது.

பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் என்ற ரீதியில் இலங்கையில் அமெரிக்கா தனது தளங்களை நிறுவும் என அறியக்கூடியதாகவுள்ளது. அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக அமெரிக்கா கரிசனை கொள்ளும். எனவே, அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக தமிழ் மக்கள் அதிக அக்கறை கொள்ள வேண்டும். நான் செல்லும் நாடுகளில், இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பாக எடுத்துரைத்து, இம் முயற்சிகளுக்கு வலுச்சேர்ப்பேன் என்றார் அவர்.

புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் அங்கு உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

பேரினவாத ஒடுக்குமுறை, அமெரிக்க ஏகாதிபத்தியம், இந்திய பிராந்திய மேலாதிக்கம், ஜனநாயக சுதந்திரம், மனித உரிமைகள் ஆகிய பிரதான சவால்கள் எமது சமாதான முயற்சிகள் தொடர்பாக உள்ளன. பேரினவாதம் தனது நிலையிலிருந்து எந்தவித விட்டுக்கொடுப்பையும் செய்யவில்லை. நாடாளுமன்ற அரசியலில் எதிர்த்தரப்பிடந்தான் பேரினவாதம் இருப்பதாகக் காட்டப்படுகிறது. உண்மை அதுவல்ல. ஆளுந்தரப்பிடம் இருக்கும் பேரனவாதம் வெளிக்காட்டப்படுவதில்லை. கடந்த அரசு ஒரு தீர்வுப்பொதியைக் கொண்டு வந்தபோது ஐ.தே.க. அதை எதிர்த்தது. இன்று பல்வேறுபட்ட நிர்ப்பந்த சூழலில்தான் அவர்கள் சமாதானத்துக்கு வந்துள்ளனர். அந்நிய சக்திகளின் தூண்டுதலும் அவர்களைச் சமாதானத்துக்கு கொண்டு வந்துள்ளது.

இன்று தமிழர்களும், முஸ்லிம்களும் இரண்டுபடும் நிலைமை உருவாக்கப்படுகிறது. இதற்குப் பின்னால் பேரினவாதத்தின் சதி இருக்கிறது.

பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய பிரதேச சுயாட்சியை வலியுறுத்தியிருந்தார். அதை நாம் வரவேற்கிறோம். ஏனெனில், பேச்சுக்கள் விட்டுக்கொடுப்புடனேயே இடம்பெறவேண்டும். ஆனால், இன்றுள்ள நிலைமையில் என்ன தீர்வை எங்கு பெற்றாலும் அரசியல் யாப்பின்படி அது மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனேயே நடைமுறைப்படுத்தப்படமுடியும்.

20 வருட யுத்தத்தை நடத்திய பெருமை இன்றைய அரசியல் யாப்புக்கு உண்டு. இந்த அரசியல் யாப்பின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. நாடாளுமன்றத்துக்கு வெளியே அரசியல் யாப்புக்கு எதிராக மக்கள் இயக்கத்தை - மக்கள் எழுச்சியை - ஏற்படுத்துவதன்மூலமே அரசியல் யாப்பை மாற்றமுடியும். அவ்வாறு மாற்றவேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பாகும். பாதுகாப்பு வலயங்களிலிருந்து இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானது. லட்சக்காணக்கான மக்களை இடம்பெயர வைத்து, அவர்களை அவல வாழ்வு வாழவைத்த இராணுவம், அந்த இடங்களிலிருந்து வெளியேற வேண்டியது அவசியமாகும்.

அமெரிக்காவின் சவாலை நாம் புறக்கணித்து விடமுடியாது. அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் ஒன்றாக இணைந்துள்ளன. அவை அடுத்த மூன்று வருடங்களுக்கு யுத்தத்தை நடத்தவேண்டாமென்று இரு தரப்பிடமிருந்தும் வாக்குறுதிகளைப் பெற்றுள்ளன. 700 கோடி டொலர்களைக் காட்டி, அவற்றின் வளர்ச்சியைப் பார்த்து மிகுதிப் பணத்தை வழங்கவுள்ளதாக அவை தெரிவித்துள்ளன. தேசிய விடுதலைப் போராட்டங்களை - பயங்கர ஆயுதங்களால் அழிக்கமுடியாத நிலையில்கூட - பணத்தினால் இல்லாமல் செய்த வரலாறுகள் உண்டு. அதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். இலங்கை முழுவதிலும் தனது பல்தேசிய நிறுவனங்களாலும் திறந்த பொருளாதாரத்தினாலும் வர்த்தகத்தை விரிவுபடுத்த அவர்களுக்குச் சமாதானம் வேண்டும்.

சகல சக்திகளையும் ஒரு நேர் கோட்டுக்குக் கொண்டுவந்து எமது சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

எமக்கிடையிலான பிளவுகள் சமாதானத்தைப் புறந்தள்ளி அந்நிய சக்திகளின் தலையீட்டுக்கு வழிவகுத்து விடும் - என்றார். (ஒ-27-12)



**அச்சுவேலி வடக்கு, கதிரொளி சனசமூகநிலையத்தில் சிறந்த மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.**

**விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி, பல்கலைக்கழக அனுமதிபெற்ற அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவி செல்வி த.நித்தியவாணிக்கு பரிசு வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில காணலாம். நிலையத்தின் செயலாளர் டாக்டர் க.த.தாமரைச்செல்வம், யாழ்.மாநகர சபை உறுப்பினர் அரவிந்தன், தமிழ்க் கூட்டமைப்பு பிரமுகர் வே.முத்துலிங்கம் ஆகியோரும் காணப்படுகின்றனர்.**

*(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)*

# பெருங்குளம் - கனகம்புளியடி வீதியில் திருடர்கள் நடமாட்டம் அதிகரிப்பு!

## இளைஞர்களும் அடாவடித்தனம்

தென்மராட்சி,டிசெ.31

சாவகச்சேரி, பெருங்குளம் சந்தியிலிருந்து கனகன்புளியடிச் சந்தி வரையுள்ள வீதியில் திருடர்களின் நடமாட்டமும் இளைஞர்களின் அடாவடித்தனங்களும் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் தரப்பில் கூறப்படுகின்றது.

இந்த வீதியூடாகச் செல்லும் பெண்கள், பாடசாலை மாணவிகள் ஆகியோர் அச்சுறுத்தலுக்கு இலக்காகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வீதியில் இன்னமும் மக்கள் மீளக்குடியமராததால் சுமார் இரண்டு மைல்கள் தூரம்வரை சன நடமாட்டம் அரிதாகவே காணப்படுகிறது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி திருடர்களும் இளைஞர்களும் தமது கைவரிசைகளைக் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வீதியில் தனித்துச் சென்ற நான்கு பெண்களிடம் தங்க நகைகள் அபகரிக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)



**தும்பளை, இலட்சுமணன் தோட்டம் இடம்பெயர்ந்தோர் முகாமில் தங்கியுள்ளோருக்கு கிறிஸ்மஸ் தினத்தையொட்டி பருத்தித்துறை உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் டி.பிரேமரட்ண, தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் ஹப்பு ஆராய்ச்சி ஆகியோர் அன்பளிப்புப் பொருள்களை வழங்குவதைப் படத்தில் காணலாம்.**

*(படம்: வடமராட்சி செய்தியாளர்)*

# யாழ்.பல்கலைக் கழகத்தில் தமிழ்ச்சிறுகதை ஆய்வரங்கு

சுன்னாகம்,டிசெ.31

'தூண்டி' இலக்கிய வட்டம், யாழ். பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை ஆய்வரங்கு எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இரு அமர்வுகளாக நடைபெறும் இந்நிகழ்வில், முதல் அமர்வு பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) தலைமையில் இடம்பெறும். இதில் 1960ஆம் ஆண்டு வரையான காலகட்டம் பற்றிய ஆய்வை ஈ.குமரன் நிகழ்த்துவார். கருத்துரையை செம்பியன்செல்வன் வழங்குவார்.

1960முதல் 1980வரையான காலகட்டம் பற்றிய ஆய்வுரையை மு. பொன்னம்பலமும், கருத்துரையை கலாநிதி செ.திருநாவுக்கரசும் நிகழ்த்துவர்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இரண்டாவது அமர்வில் 1980முதல் 1990 வரையான காலகட்டம் பற்றிய ஆய்வுரையை எஸ்.ரஞ்சகுமாரும், கருத்துரையை கோகிலா மகேந்திரனும் வழங்குவர்.

1990முதல் தற்காலம் வரையான காலகட்ட ஆய்வுரையை கலாநிதி செ.யோகராசாவும், கருத்துரையை அ.யேசுராசாவும் வழங்குவர்.

'இஸ்லாமிய படைப்பாளிகளின் சிறுகதைகள் ஓர் அறிமுகம்' என்ற தலைப்பில் மருதூர் கொத்தன் வி.எம்.இஸ்மாயில் ஆய்வுரை வழங்குவார்.

ஆய்வுரைகளின் இடையே கலந்துரையாடல்களும் இடம்பெறும்.

இதற்கான ஏற்பாடுகளை 'தூணடி' ஆசிரியர் தி.செல்வமனோகரன் செய்துள்ளார். (ஜ-27)

## களுத்துறை சிறைக்கைதிகள்:

# ஜனவரி 19 முதல் மீண்டும் சாகும்வரை உண்ணாவிரதம்

கொழும்பு,டிசெ.31

களுத்துறைச் சிறைச்சாலையில் எஞ்சியுள்ள 71 கைதிகளும் ஜனவரி 19ஆம் திகதிமுதல் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கத் தீர்மானித்துள்ளனர்.

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதிகளில் சமாதான ஒப்பந்தத்தின் பின் 158 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது வழக்குகளை எதிர்நோக்கியுள்ள 71 கைதிகளில் 38 பேர் மீது சிறு குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என்றும், அவர்கள் அனைவரும் விரைவில் விடுதலையாகும் சாத்தியம் உள்ளது என்றும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐந்து வருடங்களுக்கு மேலாகத் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் பத்துககு மேற்பட்ட கைதிகளின் ஆவணங்கள் காணாமற்போயுள்ளன என்றும், இதனால் அவர்களின் வழக்குகள் தொடர முடியாத நிலையில் உள்ளன என்றும் தெரியவருகின்றது.

தண்டனை விதிக்கப்பட்ட 21 கைதிகளில் சிலர் தண்டனைக்காலம் முடிந்து கடந்த வாரத்தில் விடுதலையாகியுள்ளனர். மேலும் பலர் அடுதத மாதத்தில் விடுதலை பெறவுள்ளனர்.

களுத்துறைச் சிறைச்சாலை அத்தியட்சகர் சந்திரசேன, நீர்கொழும்பு சிறைச்சாலைக்கு மாற்றம் பெறவுள்ளதால் புதிதாகவரும் அத்தியட்சகர் தமது பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கவேண்டும் எனக் கைதிகள் சார்பில் கடிதம் ஒன்று சிறைச்சாலை ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 19ஆம் திகதி தாம் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கப்போவதாகக் கைதிகள் தெரிவித்துள்ளனர். வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஜ)

# அரச பிரதிநிதியாக ஹக்கீம் பேச்சுக்கு செல்லக்கூடாது!

## ஹரீஸ் நேரடியாக வற்புறுத்து

காத்தான்குடி,டிசெ.31

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் பேச்சுகளுக்கு ரவூப் ஹக்கீம் அரச பிரதிநிதியாகச் செல்லக்கூடாது. தனி முஸ்லிம் தரப்பில் ஒருவராகவே செல்லவேண்டும். இப்படி திகாமடுல்ல மாவட்ட எம்.பி. ஹரீஸ், சாய்ந்தமருதுக் கூட்டத்தில் நேரடியாக வற்புறுத்தினார்; பகிரங்க வேண்டுகோளும் விடுத்தார்.

கூட்டத்தில் ஹரீஸ் பேசும்போது மேலும் கூறியதாவது:-

நாம் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்துப் போராட்டம் நடத்தியபோது பிரதமர் ரணில் எமக்கு அளித்த முக்கிய வாக்குறுதிகள் மூன்றை இதுவரை நிறைவேற்றவில்லை. எங்கள் தலைவர் மாமனிதர் ஏ.எச்.எம்.அஷ்ரப்பின் அகால மரணத்துக்கு இன்றைய அரசே காரணம் என்று கூறப்படுகிறது. இந்தச் சம்பவம் குறித்து அரசு சுதந்திரமான ஆணைக்குழு ஒன்றை நியமித்து உண்மையை வெளிப்படுத்த வேண்டும். அதைச் செய்யுமாறு ரவூப் ஹக்கீம், அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

வடக்கு - கிழக்கிற்கு சமஷ்டி அடிப்படையில் சுயாட்சி வழங்குவது என்று அரசும் புலிகளும் இணக்கம் கண்டுள்ளார்கள். எப்படியான சமஷ்டி? எப்படியான சுயாட்சி? விளக்கமில்லை. முஸ்லிம்கள், புலிகளின் சுயாட்சி அதிகாரத்தின்கீழ் வாழ்வதா அல்லது முஸ்லிம்கள் தம்மைத்தாமே ஆளும் சுயாட்சியா?

முஸ்லிம் சமூகம் ஒன்றுபட்டு அரசு - புலிகள் பேச்சின்போது தமது நிலைப்பாட்டை முன்வைக்கவேண்டும். முஸ்லிம் தலைவர்கள் வக்கரித்துக்கொண்டும் ஆளை ஆள் விலக்கிக்கொண்டும் இருப்பதால் முஸ்லிம் சமூகத்தின் நிலை என்ன ஆகும்? சமுதாய நலனுக்காகத் தலைவர்கள் ஒன்றுபடவேண்டும். முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபடக்கூடாது.

இப்படி ஹரீஸ் வற்புறுத்தினார். (ஒ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆஸ்திரேலியா தொடர் வெற்றி



வெற்றி ஓட்டத்தைப் பெற்ற மகிழ்ச்சியில் கில் கிறிஸ்ட்.

மெல்போன்,டிசெ.31

இங்கிலாந்து அணியுடனான ஆஷஸ் கிரிக்கெட் தொடரின் நான்காவது போட்டியில் ஆஸ்திரேலிய அணி 5 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

மெல்போனில் நடைபெற்ற இப்போட்டியில் ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட் இழப்பிற்கு 551 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 270 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இதில் கிறேக் வைட் மட்டும் அதிக பட்சமாக 85 ஓட்டங்களைப் பெற்றார்.

இதனால் மீண்டும் துடுப்பெடுத்தாடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 387 ஓட்டங்களைப் பெற்று 106 ஓட்டங்களால் முன்னணி பெற்றது. இதில் மைக்கல் வோகன் 145 ஓட்டங்களைப் பெற்றார்.

இதனால் வெற்றிபெறுவதற்கு 107 ஓட்டங்கள் தேவையான நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி இறுதி நாளான நேற்று 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கையடைந்தது. இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஜஸ்ரின் லாங்கர் தெரிவுசெய்யப்பட்டார்.

5 தொடர்கொண்ட இப்போட்டியில் இதுவரை நடைபெற்ற நான்கு போட்டிகளிலும் ஆஸ்திரேலிய அணியே வெற்றி பெற்றுள்ளது. ஐந்தாவதும் இறுதியுமான போட்டி நாளைமறுதினம் வியாழக்கிழமை சிட்னியில் ஆரம்பமாகவுள்ளது. (ஒ-5)

# இலங்கை அணி படுதோல்வி

14 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கிண்ணத்துக்கான முதலாவது சுற்று உதைபந்தாட்டப் போட்டியில் இலங்கை 5 போட்டிகளிலும் தோல்வியுற்றுள்ளது.

ஆசிய உதைபந்தாட்டச் சம்மேளனம் (ஏ.எவ்.சி) நேபாளத்தில் இப்போட்டிகளை நடத்தியது.

இத்தொடரில் மிகவும் பலவீனமான அணியாகக் கருதப்பட்ட பூட்டானிடமும் இலங்கை 4-0 என்ற கோல்கணக்கில் தோல்வியுற்றது.

ஏனைய போட்டிகளில் பங்களாதேஷிடம் 8-0, இந்தியாவிடம் 9-0, நேபாள அணியிடம் 9-0, மாலைதீவு அணியிடம் 6-0 என்ற அடிப்படைகளில் இலங்கை தோல்வியுற்றது.

இத்தொடரில் இலங்கை அணிக்கு எதிராக 36 கோல்கள் அடிக்கப்பட்டுள்ளன. அதேவேளை இலங்கை ஒரு கோல்களைத்தானும் அடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தென்னாபிரிக்க அணி பாகிஸ்தானை வென்றது

டேர்பன்,டிசெ.31

பாகிஸ்தானுடனான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 10 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

டேர்பன் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 368 ஓட்டங்களைப் பெற்றது.

அடுத்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்ஸில் 161 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதனால் 'பலோ ஒன்' நிலைக்குத் தள்ளப்பட்ட பாகிஸ்தான் அணி மூன்றாவது நாளன்று தனது 2ஆவவது இன்னிங்ஸில் 8 விக்கெட் இழப்பிற்கு 218 ஓட்டங்களைப் பெற்றது.

நான்காவது நாளான நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை 250 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதனால் வெற்றிபெறுவதற்கு 44 ஓட்டங்கள் தேவையான நிலையில் தனது இரண்டாவது இன்[illegible]ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க [illegible]க்கெட் இழப்பின்றி வெற்றி [illegible]க அடைந்தது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக தென்னாபிரிக்க வீரர் ஜக்கலிஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

இவ்விரு அணிகளுக்கிடையேயான 2ஆவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 2ஆம் திகதி கேப்டவுனில் ஆரம்பமாகிறது. (ஒ-5)

# இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் நியூஸிலாந்து அணிக்கு வெற்றி

இந்திய அணியுடனான இரண்டாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் நியூஸிலாந்து அணி 35 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

வீரேந்தர் ஷேவாக் 119 பந்துவீச்சுக்களில் 108 ஓட்டங்களைப் பெற்ற போதும் ஏனையவீரர்கள் பிரகாசிக்கத் தவறியதால் இந்திய அணி தோல்வியுற்றது.

நேற்றுமுன்தினம் நேப்பியர் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 254 ஓட்டங்களைக் குவித்தது. நேதன் ஆஸ்லே 76 ஓட்டங்களையும் மத்தியூ சின்கிளியர் 78 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்திய பந்துவீச்சாளர்களில் ஜகவல் ஸ்ரீநாத், ஸஹீர்கான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இந்திய அணி உரிய நேரத்திற்குள் பந்துவீசி முடிக்காத காரணத்தினால் அவ்வணி வெற்றி இலக்கை 48 ஓவர்களில் அடையவேண்டுமென நிர்ப்பந்திக்கப்பட்டது. அத்துடன் இப்போட்டிக்கான இந்திய வீரர்களின் ஊதியத்தில் 10 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

இந்திய அணித் தலைவர் கங்குலி 3 பந்துவீச்சுக்களை எதிர்கொண்ட நிலையில் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

ஏனைய விக்கெட்டுக்களும் படிப்படியாக விழத்தொடங்கிய போதிலும் வீரேந்தர் ஷேவாக் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார். 119 பந்து வீச்சுக்களை எதிர்கொண்ட அவர், 2 சிக்ஸர்கள், 9 பௌண்டரிகள் உட்பட 108 ஓட்டங்களைப் பெற்றார். 40 ஆவது ஓவரில் அவர் ஆட்டமிழந்தபோது 51 ஓட்டங்களை மட்டுமே பெறவேண்டியிருந்தது.

எனினும், 43.4 ஓவர்களில் 219 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது இந்திய அணி.

கைல் மில்ஸ் 3 விக்கெட்டுக்களையும் டெரல் டப்பி 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

நியூஸிலாந்து விக்கெட் காப்பாளர் பிரெண்டன் மெக்கலம் யுவராஜ் சிங்கை 'ஸ்ட்டம்' முறையில் ஆட்டமிழக்கச் செய்ததுடன் 4 பிடிகளையும் கைப்பற்றினார். இதன்மூலம் 1994/95இல் கோவாவில் மேற்கிந்திய அணிக்கு எதிராக அடம் பரோர் ஏற்படுத்தி சாதனையை மெக்கலம் சமப்படுத்தினார்.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக வீரேந்தர்ஷேவாக் தெரிவானார். 7போட்டிகள் கொண்ட இத்தொடரில் நியூஸிலாந்து 2:0 விகிதத்தில் முன்னணியில் உள்ளது. முன்றாவது போட்டி நாளை புதன் நடைபெறவுள்ளது. (ஒ-5)

# கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகள்

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர் பிரிவுகளில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கான தடகளப் போட்டிகள் எதிர்வரும் மார்ச் மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ளன.

சம்பந்தப்பட்ட கழகங்கள் தம்து பிரதேச விளையாட்டு அலுவலர்களிடம் தமக்குரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு மாவட்ட விளையாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்கள் தமக்குரிய விண்ணப்ப படிவங்களை எதிர்வரும் 3ஆம் திகதிக்கு முன்னர் பெற்று விண்ணப்பிக்குமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எம்.ஆர்.மோகனதாஸ்"ம் -

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கழகங்கள் எதிர்வரும் 4ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பப்படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கு மாறு விளையாட்டு உத்தியோகத்தர் கு.முகுந்தனும் கேட்டுள்ளனர். (ஒ-[illegible]5)

# விளையாட்டு

# கட்டிக் இற்கு எச்சரிக்கை

தகாத வார்த்தைப் பிரயோகம், தகாத சைகை என்பவற்றுக்காக இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் அன்ருகட்டிக்கிற்கு ஐ.சி.சி. கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆஸ்திரேலியாவுடனான நான்காவது ஆஷஸ்போட்டியின் இரண்டாவது நாளன்று அவரது பந்து வீச்சொன்று 'நோ போல்' என அறிவிக்கப்பட்டது. அதையடுத்து தகாத வார்த்தைப் பிரயோகத்தை மேற்கொண்டார் கட்டிக் இதன் மூலம் ஐ.சி.சி. ஒழுக்க விதிக்கோவையின் 1.4 ஆவது பிரிவை கட்டிக் மீறிவிட்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டது.

அதையடுத்து கட்டிக் விசாரணைக்கு அழைக்கப்பட்டார். அன்ரு கட்டிக் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதுடன் மன்னிப்பும் கோரினார்

மேற்படி குற்றச்சாட்டுகளுக்கு போட்டி ஊதியத்தில் 50 சதவீதம் வரை அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

## நீதிமன்றம் செல்லும் மோதல் விவகாரம்

உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றும் வீரர்களின் வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக இந்தியக் கிரிக்கட் சபைக்கும் ஐ.சி.சி. இற்கும் இடையே மோதல் நடந்துவருகின்றது.

இப்பிரச்சினை நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்படலாம் என இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைத தலைவர் ஜக்மோகன் டால்மியா பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

"கோடிட்ட இடங்களில் கையெழுத் திடுமாறு இந்திய வீரர்கள் வற்பு றுத்த மாட்டார்கள். ஐ.சி.சியின் தந்திரங் கள் குறித்து இப்போது நான் மேலும் பேச விரும்பவில்லை.

சட்டத்தின் சரியான பக்கம் நாம் இருக்கும் போது ஐ.சி.சியின் அழுத்தம் ஏற்படுத்தும் தந்திரங்கள் பலிக்க மாட்டாது.

ஐ.சி.சி. நிகழ்ச்சி ஒப்பந்தத்தில் 2001.5.28 இல் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கையெழுத்திட்டது.

எனினும் போட்டிகளில் பங்குபற்றும் நாடுகளின் ஒப்பந்தத்தில் (பீ.என்.ஏ) உள்ள சில விடயங்களை எதிர்த்து கடந்த மார்ச் 12 ஆம் திகதி ஐ.சி.சியிற்கு இந்தியா கடிதம் அனுப்பியது.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அப்போதைய செயலாளர் நிரஞ்சன் ஷா, ஐ.சி.சி. வர்த்தக முகாமையாளருக்கு ஈமெயில் மூலம் இக்கடிதத்தை அனுப்பினார்.

மொத்தமாக 13 விடயங்களுக்கு இக்கடிதம் மூலம் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. உதாரணமாக போட்டிகள் ஆரம்பமாவதற்கு முன்பிருந்து போட்டி முடிவடைந்து 30 நாள்கள் வரை தமது பிரத்தியேக விளம்பரங்களில் வீரர்கள் தோன்றுவதை எம்மால் கட்டுப்படுத்தமுடியாது.

"வீரர்களின் இத்தகைய உரிமைகளில் நாம் குறுக்கிட மாட்டோம் ஏனெனில் [illegible] அடிப்படை உரிமைகளைப் பாதிக்கும்"

- இவ்வாறு டால்மியா கூறினார்.

# பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அழை[illegible]

பாகிஸ்தானில் முக்கோண கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்றில் பங்கேற்க இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கு பாக். கிரிக்கெட் சபை அழைப்பு விடுத்துள்ளது.

எதிர்வரும் ஏப்ரல், மே மாதங்களில் இந்திய அணி பாகிஸ்தானில் 3 டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

எனினும் பாகிஸ்தானுக்கு இந்திய அணி விஜயம் செய்வதற்கு இந்திய அரசு அனுமதி அளிக்க மறுத்து வருகிறது. இச்சுற்றுலா நடைபெறுமா என்பது சந்தேகத்திற்கிடமாகவிருப்பதால் இக்காலப்பகுதியில இலங்கை, இங்கிலாந்து அணிகளை பாகிஸ்தானுக்கு அழைக்க தீர்மானிககப்பட்டுள்ளது.

- இவ்வாறு பாக். கிரிக்கெட் சபை யின் தலைவர் தாரிக் ஸியா கூறியுள்ளார். (ஒ)


அராலி - ஆவரம்பிட்டி ஸ்ரீ பூந்துமாரி அம்மன் தேவஸ்தான

பரிபாலசபையின் அறிவித்தல்

ஆலய பூசகர் கடமையில் இருந்து விலகல்

மேற்படி எமது ஆலயத்தின் பூசகராக இருந்த சிவஸ்ரீ செல்லத்துரைக் குருக்கள் யோகானந்த சர்மா (சின்னையா) கடந்த 09.07.2002 ஆம் திகத தொடக்கம் முன்னறிவித்தல் இன்றித் தானாகக் கடமையினின்றும் விலகிச் சென்றுவிட்டார். ஆகவே, இந்த ஆலயத்திற்கும் மேற்குறிப்பிடப்பட்ட சிவஸ்ரீ செல்லத்துரைக் குருக்கள் யோகானந்த சர்மா (சின்னையா) அவர்களுக்கும் இடையில் உள்ள தொடர்புகள் யாவும் அறவே நீக்கப்பட்டுள்ளன என்பதை அனைத்து அம்பிகை அடியார்களுக்கும் அறியத்தருகின்றோம்.

(12530) - ஆலய பரிபாலன சபையினர்.

ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட சபை

யாழ்ப்பாணம்.

மேற்படி சபையினரின் இருமுடி கட்டுதலும் யாத்திரை ஆரம்ப நிகழ்வுகளும் இன்று (31.12.2002) செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு கந்தர்மடம் செட்டியம்தாழ்வு ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெறும். அத்தருணம் ஐயப்பனின் அடியார்கள் அனைவரும் இஷ்டசித்திகளைப் பெற்று சிறப்புற வேண்டுகின்றோம்.

*சாமியே சரணம் ஐயப்பா!*

(12532) -ஐயப்ப அடியார்கள்.

தென்மராட்சி சிற்றூர்தி சேவைகள் சங்கம்

சாவகச்சேரி.

அலுவலக இடம்மாற்றம்

சாவகச்சேரி, டச்சு வீதியில் இயங்கி வந்த சங்க அலுவலகம் 01.01.2003 தொடக்கம் சாவகச்சேரி கோட்டடி முன்பாக உள்ள கட்டடத்தில் இயங்கவுள்ளது.

(C/25769) -நிர்வாகம்.

தென்மராட்சி சிற்றூர்தி சேவைகள் சங்கம்

சாவகச்சேரி.

பாடசாலை சேவை - 769 பாதை

புத்தூர்சந்தி - யாழ்ப்பாணம் - புத்தூர்சந்தி

யாழ்ப்பாணப் பாடசாலைகளில் கல்வி கற்கும் ம[illegible]வர்களின் நலன் கருதி மீசாலை - புத்தூர் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான பாடசாலை சேவை, சங்கத்தினால் 2003ஆம் ஆண்டு ஆரம்பம் முதல் நடத்தப்படவுள்ளது. இந்தச் சேவையில் பிரயாணம் செய்ய விரும்பும் மாணவ மாணவிகள் சாவகச்சேரி கோட்டடிக்கு முன்பாகவுள்ள சங்க அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

(C/25768) -நிர்வாகம்.


## மரண அறிவித்தல்

### திருமதி நவரத்தினம் மங்கையர்க்கரசி

உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நவரத்தினம் மங்கையர்க்கரசி நேற்று (30.12.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் உரும்பிராயைச் சேர்ந்த நாகநாதன் கந்தையாவின் அன்பு மகளும் நவரத்தினத்தின் அன்பு மனைவியும் சுவர்ணலீலா, சற்குணலீலா, இந்திரலீலா, கஜமுகவரதன் ஆகியோரின் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சி.நவரத்தினம்
(கணவர்)

*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.*

(12537)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநாதையாகிவிட்ட சிங்கள இனத்தை காப்பாற்றவே கட்சி தொடங்கினேன்!

## இப்படிக் கூறுகிறார் கங்கொடவில சோமதேரர்

**ஏற்கனவே சிங்கள மக்களின் நலன்காக்கப் புறப்பட்ட கட்சிகள், சிங்கள மக்கள் இழந்த உரிமைகளை (அப்படி இழந்திருந்தால்) மீட்டுத்தரத் தவறிவிட்டதாகக் கூறி, தற்போது ஜனவிஜய தேசிய அமைப்பு என்ற பெயரில் ஒரு கட்சி உருவாக்கப்பட்டுள்ளது. அதன் தலைவர் ஒரு பௌத்த துறவி. பெயர்: கங்கொடவில சோமதேரர். அவருக்குள்ள பிரச்சினை, அவரிடம் ஜனாதிபதி பதவி இல்லாதிருப்பது. 'லங்காதீப' வார இதழுக்கு அவர் வழங்கிய பேட்டியின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

*கேள்வி:* தாங்கள் அரசியலில் ஈடுபடத் தீர்மானித்தது ஏன்?

*பதில்:* சிங்கள பௌத்த மக்கள் இன்று பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்கிறார்கள். குறிப்பாக சிங்களப் பௌத்த இனம் இன்று அநாதை இனமாக மாறிவிட்டது. இந்த நிலைமையிலிருந்து சிங்கள பௌத்தர்களைக் கரைசேர்க்க வேண்டிய வழிகாட்டல்களை மேற்கொள்ளவேண்டும் என நான் சிந்தித்தேன். அந்நோக்கத்திலேயே அரசியலில் ஈடுபடுவது எனத் தீர்மானித்தேன்.

*கேள்வி:* அதாவது அடுத்த பொதுத் தேர்தலில் தாங்கள் நாடாளுமன்ற உறுப்பினராவதற்குப் போட்டியிடவுள்ளீர்களா?

*பதில்:* இன்னும் இதுவரை இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. ஆனால், நான் போட்டியிடுவதாயின் யாருக்கும் தலைகுனியாத பதவிக்கே போட்டியிடுவேன்.

*கேள்வி:* தங்களது பதிலில் தாங்கள் ஜனாதிபதிப் பதவிக்காகவே போட்டியிடவுள்ளீர்கள் என்பது தெளிவாகிறது?

### மாற்றார் தோட்டத்திலிருந்து...

*பதில்:* ஆம். அல்லாவிடின் எமது நோக்கங்களை நிறைவேற்றமுடியாது இல்லையா? எமது நோக்கங்களை உரிய விதத்தில் நிறைவேற்ற ஜனாதிபதிப் பதவி கிடைக்கவேண்டும். நான் போட்டியிடுவதானால் அந்தப் பதவிக்கே போட்டியிடுவேன்.

*கேள்வி:* பத்தேகம சமித தேரர் தற்போது நாடாளுமன்ற பிரதிநிதியாகவுள்ளார். சிலவேளை அவர் உங்களுக்கு ஆதர்ஷபுருஷராக விளங்குகிறாரா?

*பதில்:* சமித தேரர், சமசமாஜக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். அவரிடம் அந்தக் கொள்கைகளேயுள்ளன. ஆனால், எனது கொள்கைகள் வேறானவை. எனவே, அவர் எனது ஆதர்ஷபுருஷர் அல்ல. மற்றொரு காரணமும் உள்ளது. சமித தேரர் 2001இல் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், நான் இற்றைக்குப் பல காலத்திற்கு முன்னரே பௌத்த சிங்கள மக்களின் உரிமைக்காகக் குரல்கொடுத்து வந்துள்ளேன். மனிதாபிமானத்தைப் பேணி, சிங்கள பௌத்தர்கள் உரிமைகளுடன் எவ்வாறு இந்த நாட்டில் வாழலாம் என்பது குறித்தே கூறிவந்தேன். அவ்வாறு பார்க்கும்போது இந்நாட்டு மக்களுக்காகக் குரல்கொடுக்க ஆரம்பித்தது பல ஆண்டுகளுக்கு முன்னரே என்று கூறலாம்.

*கேள்வி:* தாங்கள் அரசியலில் பிரவேசிப்பதற்காகவே மதபோதனையில் ஈடுபட்டதாகத் தங்கள் பதிலைக் கருதலாமா?

*பதில்:* தவறாக அர்த்தம் புரிவது நல்லதல்ல. நாங்கள் எவ்வளவு தூரம் மதபோதனையை மேற்கொண்டாலும் அந்தப் போதனைகளைப் பின்பற்றும் சமூகத்தில் மனிதர்கள் வாழவில்லையே. நாங்கள் அதைப் புரிந்துகொள்ளவேண்டும். சிங்கள பௌத்தர்கள் வாழ்வது, அவர்களது உரிமைகள் பறிக்கப்பட்டுவரும் சூழ்நிலையிலேயேயாகும். இந்தச் சூழ்நிலையில் பௌத்தத்தை மாத்திரமன்றி ஆகக் குறைந்தது மனிதத் தன்மையையே பாதுகாக்கமுடியாதுள்ளது. எனவேதான், ஜனவிஜய தேசிய அமைப்பை உருவாக்கத் தீர்மானித்தேன்.

*கேள்வி:* தங்களது கட்சியின் தலைவர் யார்?

*பதில்:* தலைவர் நானே.

*கேள்வி:* தங்களுடன் இணைந்துள்ள முக்கிய பிரமுகர்கள் யார்?

*பதில்:* அதுபற்றித் தற்போது கூறமுடியாது. அந்தத் தகவல்களை வெளியிடக்கூடிய சூழ்நிலை இன்று உருவாகவில்லை. ஜனவிஜய தேசிய அமைப்பின் கொள்கைகள் இயல்பாக மக்களைச் சென்றடையும் விதத்தில் எமது அமைப்பினர் பற்றிய விவரமும் இயல்பாக மக்களைச் சென்றடையும்.

*கேள்வி:* அரசியலில் முதலாளித்துவ மற்றும் இடதுசாரி என இரு பிரிவுகள் உள்ளன. இவற்றில் தாங்கள் எந்தப் பிரிவை அனுசரிக்கப்போகிறீர்கள்?

*பதில்:* நான் இந்த இரண்டையுமே நிராகரிக்கிறேன். பௌத்த தர்மத்தில் அரச நிர்வாகம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. எந்தவொரு நாடும் சௌபாக்கியத்தைப் பெறவேண்டுமாயின் பௌத்த தர்மத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அரசியல் முறையைப் பின்பற்றவேண்டும்.

*கேள்வி:* பௌத்த தேரர்களுக்கு அரசியல் பொருந்தாது எனப் பலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். இத்தகைய மரவுவழிக் கருத்துக்களுக்கு எதிராகச் சிரமமின்றிச் செயற்பட வாய்ப்புக்கள் உள்ளனவா?

*பதில்:* இந்த நாட்டின் நிர்வாகத்தை உரியமுறையில் மேற்கொள்வதாயின் நாங்கள் அரசியலுக்கு வரவேண்டிய தேவை இல்லைத்தான். ஆனால், நாடு உரியமுறையில் நிர்வகிக்கப்படுவதில்லையே. வரலாற்றில் இவ்வாறான நிலைமைகள் உருவாகும் வேளைகளில் பௌத்த துறவிகளே முன்வந்துள்ளனர். வாரியப்பொல சுமங்கள தேரர், தீபெத் நாட்டைச்

### தமிழில்: கஜனி

சேர்ந்த மஹிந்த தேரர் ஆகியோர் அன்று தங்களுக்கான அரசியல் பொறுப்புக்களை நிறைவேற்றினர். அன்று அவர்கள் தங்கள் அரசியல் பொறுப்புக்களை நிறைவேற்றாதுவிட்டிருப்பின் இன்று நாட்டின் நிலைமை வேறுபட்டதாக இருக்கும். இன்றும் அவ்வாறான நிலைமையேயுள்ளது. இருப்பினும், இந்த ஒழுக்கம் கெட்ட அரசியலை நாங்கள் பின்பற்றவில்லை. நாங்கள் இதைவிட உயர்மட்டத்தில் இருந்து இந்நாட்டிலுள்ள சிங்கள பௌத்த மக்களுக்கு வழிகாட்டும் அரசியலை மேற்கொள்வோம்.

*கேள்வி:* தற்போது உருவாகியுள்ள சமூகப் பிரச்சினைகளின் மத்தியில் மாற்றுத் தலைவராக ஏதாவது அழுத்தங்களை (நீங்கள்) பிரயோகிக்கலாம் என நினைக்கிறீர்களா?

*பதில்:* ஆம், கட்டாயமாக ஆம். இந்நாட்டுமக்கள் என்னை ஏற்றுள்ளனர் என நான் நம்புகிறேன். மக்கள் என்னை ஏற்றதன் ஊடாக இந்நாட்டு மக்களுக்கு ஏதாவது சேவையாற்ற முடியுமென நான் நம்புகிறேன். ஏனைய தலைவர்கள் குறித்து இந்நாட்டு மக்களுக்கு நம்பிக்கையுமில்லை; அவர்களை மக்கள் ஏற்றுக்கொள்வதுமில்லை. குறிப்பாக அந்தத் தலைவர்கள் பௌத்த சிங்கள மக்களுக்கு வழிகாட்டுவதில்லை. இக்காரணத்தாலேயே இந்தவேளையில் நான் முன்வரவேண்டிய நிலைமை உருவானது. இது எனது கடமையாகும்.

எனக்கு இப்படிக் கஷ்டப்பட வேண்டிய தேவையில்லை. ஆஸ்திரேலியா சென்று மிகவும் வசதியாக வாழமுடியும். ஆனால், அது பொறுப்பற்ற செயல் என நான் நினைக்கிறேன்.



யாருக்கு வாக்களிப்பது என்பதே இந்நாட்டுமக்களுக்குள்ள பிரச்சினையாகும். இதற்கான வலுவான பதிலை இந்தச் சமூகத்திற்கு வழங்கவே முயற்சிக்கிறேன்.

*கேள்வி:* தாங்கள் சிங்கள பௌத்த மக்களுக்காகவே பேசி வருகிறீர்கள். ஆனால், நாட்டில் வேறு இன மக்களும் வாழ்கின்றனர். பல்வேறு மதங்கள் உள்ளன. ஜனாதிபதி பதவி போன்ற பொறுப்பான பதவிக்கு போட்டியிடுவதாயின் அதற்கு அனைத்து இன மதத்தவர்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது அல்லவா?

*பதில்:* ஆம். நான் அதை ஒதுக்கிவிடவில்லை. யதார்த்தத்தை - மனிதத்தன்மையை மதிப்பளிக்கும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் வேறு மதத்தவர்களும் எமக்கு வாய்ப்பளிக்க முடியும். நாங்கள் உருவாக்கும் நாட்டில் சகல இனத்தவர்களினதும் சகல மதத்தினரதும் உரிமைகளுக்குப் பாதுகாப்பளிக்கப்படும்.

*கேள்வி:* ஆனால், சிங்கள பௌத்த மக்கள் குறித்தே நீங்கள் பேசி வருகிறீர்கள். நீங்கள் இனவாதம் மற்றும் மதவாதத்தை எவ்வாறு ஒதுக்கிவைக்கிறீர்கள் என்பதை சற்று விவரிக்க முடியுமா?

*பதில்:* சிங்களவர்கள் மற்றும் பௌத்தர்கள் மட்டுமே இருக்கமுடியும் எனக் கூறினால் அது இனவாதமாகும். நாங்கள் அவ்வாறு கூறவில்லையே. சிங்கள பௌத்த மக்களுக்குள்ள உரிமை ஏனைய மக்களுக்கும் இருக்கவேண்டும் என நாங்கள் கூறுகிறோம். தமிழ்மக்கள் ஆயிரக்கணக்கான வருடங்களாக இந்த நாட்டில் வாழ்ந்துவருகின்றனர். அவர்களுக்கும் இந்த நாட்டில் வாழ்வதற்கு உரிமையுள்ளது. ஆனால், இன்று அந்த உரிமை சிங்கள பௌத்த மக்களுக்கு இல்லை. நாம் அது குறித்தே பேசி வருகிறோம். ஒருவர் தனது இனத்தைப் பற்றி, தனது மதத்தைப் பற்றி அக்கறை கொள்வதை எவ்வாறு இனவாதம் எனக் கூறமுடியும்.

*கேள்வி:* மனித சமுதாயத்தில் எல்லோரும் பிரச்சினைகளின் மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றனர். தமிழ் மக்களுக்கு பிரத்தியேகமான பிரச்சினைகள் உள்ளன எனவும், முஸ்லிம் மக்களுக்கு பிரத்தியேகமான பிரச்சினைகள் உள்ளன எனவும் அவர்கள் கூறுகின்றனர். ஆனால், சிங்கள பௌத்த மக்களுக்கே பிரத்தியேகமான பிரச்சினைகள் உள்ளன என நீங்கள் கூறுகிறீர்களே?

*பதில்:* ஸ்ரீலங்காவின் மூலைமுடுக்குகள் அனைத்திலும் தமிழ்மக்களும் முஸ்லிம் மக்களும் வாழ்கின்றனர். ஆனால், அந்த உரிமை சிங்கள பௌத்த மக்களுக்கு இல்லை. சிங்கள பௌத்த மக்களைப் பொறுத்தவரையில் இந்த நாடு ஏற்கனவே துண்டாடப்பட்டுவிட்டது. இன்று சிங்கள பௌத்தர்கள் வடக்கிலோ அல்லது கிழக்கிலோ அச்சமின்றி - சந்தேகமின்றி வாழமுடியுமா? இது குறித்து அரசியல்வாதிகள் அக்கறை கொள்வதில்லை. சுமார் 50 ஆண்டுகளாக சிங்கள இனத்திற்கு இந்த நிலைமையே உள்ளது. இந்தப் பாதிப்பு தமிழ்மக்களுக்கோ முஸ்லிம் மக்களுக்கோ அல்லது கிறிஸ்தவர்களுக்கோ இல்லை. சிங்கள பௌத்தர்களுக்குத்தான் குடும்பக்கட்டுப்பாடு உள்ளது. பிறக்கும் பிள்ளைகளில் சுமார் 60 அல்லது 70 சதவீதத்தினர் "சிசேரியன்" சத்திர சிகிச்சை மூலமே பிறக்கிறார்கள். அப்படி நேர்ந்தால் மேலும் இரண்டு அல்லது மூன்று பிள்ளைகளுக்கு மேல் பெறமுடியாது. இது சிங்கள இனத்தைப் பாதிக்கச்செய்யும் தந்திரமென்றே நான் நினைக்கிறேன். உண்மையில் சிங்கள் இனம் அநாதையாகிவிட்டது. நாங்கள் மிகவும் துணிச்சலுடன் இந்தப் பிரச்சினையை அணுகுகிறோம்.

*கேள்வி:* இந்த நிலைமையைப் போக்குவதற்கு நீங்கள் எதிர்பார்க்கும் தீர்வு என்ன?

*பதில்:* நாட்டின் பொருளாதார நிலைமை சீராக இருக்குமாயினால் குடும்பப் பொருளாதாரமும் சீராக அமையும். பொதுவாக எமது நாட்டில் 80வீதத்துக்கும் அதிகமான குடும்பங்களின் பொருளாதார நிலைமை சீராகவே உள்ளது. வீட்டில் ஆண்களின் தீய பழக்கங்களை முடிவுக்குக் கொண்டுவந்தால் குடும்பங்களின் பொருளாதாரம் மேலும் சீரடையும். அவ்வேளையில் நாடு சீர

(12ஆம் பக்கம் பார்க்க)




ஒளிப்பதிவு: கிருபா
ஒளிப்பதிவு உதவி: நிலவன், புரட்சிநிலவன், தவநீதன், டயஸ், திலகன்.
படத்தொகுப்பு: க.சிவா
இசை: இசைப்பிரியன்
தயாரிப்பு நிர்வாகம்: சங்கர், பகலவன்
தயாரிப்பு: திரைப்பட உருவாக்கற்பிரிவு, நிதர்சனம்
பாடல்: வீரா, முல்லைக்கமல், நாவண்ணன்
பாடியோர்: குமாரசாமி, சாந்தன், வசீகரன், யுவராஜ்
பாடல் ஒலிப்பதிவு: மலையவன்
ஒலிப்பதிவு: அருமை, பாண்டியன், இலக்கோன்

கதை, திரைக்கதை வசனம், இயக்கம்: ந.கேசவராஜன்

டிசெம்பர் 31 தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள 300 மினி சினிமாக்களில் வெளிவருகின்றது.

நிதர்சனம் நிறுவனம் வளர்ச்சிபெற வாழ்த்துகின்றோம்

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்

INSTITUTE OF INFORMATICS STUDIES

IIS, 100, Clock Tower Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பூவுலகில் 28 - 08 - 1944

வானுலகில் 01 - 12 - 2002

## அமரர் தம்பிப்பிள்ளை நவரத்தினம்

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் சங்கானை,
கூடத்து அம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட
*(இளைப்பாறிய .பொலீஸ் சார்ஜன்)*

அன்புள்ள அப்பாவாக, ஆதரிப்பில் தெய்வமாக,
இல்லத்தில் இனியவனாக, ஈடில்லா பதியாக,
உறவினர்க்கு உயிராக, ஊரார்க்கு உத்தமனாக,
எல்லார்க்கும் எளியவனாக ஏன் ஐயா இருந்துவிட்டு
ஐயகோ என நாமலற ஒன்றுமே சொல்லாது
ஓடிய விட்டீரோ ஔவை சொல் அமுதமென
நாமும் அதுவழியே போமளவும் எமக்கென்னென்று
இட்டுண்டிருக்க இயலுமா ஐயா!
ஆண்டு பல சென்றாலும் ஆறுமோ எம்துயர்?

**எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக, எல்லாம் வல்ல சங்கானை, கூடத்து மனோன்மணி அம்பாளை வேண்டுகின்றோம்.**

*கூடத்து அம்மன் கோயிலடி,*
*சங்கானை.* (12528)
மனைவி,
மக்கள்.

# மரண அறிவித்தல்கள்

## அப்பாக்குட்டி முருகேசு (அ.மு)

**(முன்னாள் பிரபல வர்த்தகர், பொரளை - முருகேசு)**

புங்குடுதீவு கிழக்கு, 11ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது 79/6, W.A.சில்வாமாவத்தை, வெள்ளவத்தையை வசிப்பிடமாகக் கொண்டவருமான அப்பாக்குட்டி முருகேசு 29.12.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற அப்பாக்குட்டி - முத்துப்பிள்ளையின் அன்பு மகனும் சின்னத்தம்பி - முத்துப்பிள்ளையின் அன்பு மருமகனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும் பத்மசோதி (Berlin), அமிர்தரஞ்சிதம (Canada), அமிர்தமலர் (Canada), இன்பவதனி, ரவீந்திரராஜா (A.M.T. Transport Service - Irupalai), தவேந்திரராஜா (Accountan, London), அமிர்தநாயகம் (Engineer - C.D.I. Engineer's pvt., Colombo), தனநாயகம் (A.M.T. Transports, Thulasi Trade Center - Colombo), கணேசலிங்கம் (U.S.A. Trading Company, Colombo), யசோதரா (Canada) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், தில்லைநாதன் (Canada), ராஜரட்ணம் (Canada), தர்மலிங்கம் (Tharsana Transport Service), யோகராஜா (Canada), உதயகுமாரி, ஜனனி, திருவேணி, நிர்மலா, தபோதினி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சோமசுந்தரம், சிவசரனம, சிவஞானம் (Canada), பார்வதி (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற நீ.மு.தியாகராஜா, S.K.நடராஜா (Radio Ceylon), சோமாவதி, முத்தையா (Canada), Dr.சண்முகநாதன் (Colombo) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (31.12.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் 4.30 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

*79/6.W.A.சில்வாமாவத்தை,*
*வெள்ளவத்தை,*
*கொழும்பு - 6.*
*T.P. 587570, 505814.* (12492)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
அ.மு.ரவீந்திரராஜா (மகன்)
(A.M.T.)

## திருமதி நல்லையா தெய்வானைப்பிள்ளை

மீசாலை வடக்கைச் சேர்ந்த திருமதி நல்லையா தெய்வானைப்பிள்ளை 29.12.2002 ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற R.R.நல்லையா (நொத்தாரிஸ் கிளாக்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, சிவபாக்கியம் மற்றும் இராமநாதன் (நகரசபை, சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சிறிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2002) செவ்வாய்க்கிழமை பகல் 1 மணிக்கு மீசாலை கிழக்கு, அல்லாரை வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பொற்புலவு மயானத திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை கிழக்கு.*

தகவல்:
ஆ.இராமநாதன்
(சி25770) (பெறாமகன்.)

## தம்பு பொன்னையா

பிறவுண் வீதி, கலட்டிச் சந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு பொன்னையா கடந்த சனிக்கிழமை 28.12.2002 காலமானார்.

அன்னார் துரையம்மாவின் அன்புக் கணவரும் நித்தியரஞ்சிதம் (கமலா), விமலன் (விக்ரர்), விக்கினேஸ்வரி (உஷா), அன்ரன், விஜயன், அருள்வதனி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கந்தசாமி, இராசரத்தினம், காலஞ்சென்ற பன்னீர்ச்செல்வம், மேரிஜெசிந்தா, பிரதீபா, சுபாஜினி, ஆகியோரின் மாமனாரும் பேனாட் விஜிதா, கிருபாகரன் சுஜாதா, சிவமுரளி, குமார் கவிதா, சுபீதா, சுபீதர், சோபிதர், அமலன், நிமலன், எஸ்தர், எட்வினா, விவேக்சன், சுவேஜா, சுவேக்சன், ஜெடீசன், ஹரீசன், ஜெனிசன், கிருஸ்னி, சாருஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் நோயலின், றொசால், பேனிற்றா, யேசன், செரின்லாவன்ஜா, றொபின்சன்மார்க், ஏஞ்சல் ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2002) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*76/59, இராமநாதன் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (12535)

தகவல்:
பொ.விமலன் (மகன்).

# அநாதையாகிவிட்ட.......

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

டையும். அவ்வாறான நிலைமையையே நாம் மக்களுக்குத் தோற்றுவிக்கவேண்டும்.

*கேள்வி:* அடுத்த பொதுத் தேர்தலில் எத்தனை ஆசனங்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கிறீர்கள்?

*பதில்:* அது குறித்து தற்போது எதிர்கூறல் வெளியிடமுடியாது. அது மக்களின் தீர்ப்பாகும்.

*கேள்வி:* தற்போது நீங்கள் கணித்து வைத்துள்ள கணக்கின்படி எத்தனை ஆசனங்களைப் பெறமுடியும்.

*பதில்:* பொதுவாக 20 - 25 ஆசனங்களைப் பெறமுடியும் என நினைக்கிறேன். ஜே.வி.பிக்கு 16 ஆசனங்கள் கிடைத்துள்ளன. அதனுடன் ஒப்பிடுகையில் அவர்களிலும் பார்க்க எம்மால் முன்னேற்றமாகச் செயற்படமுடியும்.

*கேள்வி:* சிஹல உறுமயக் கட்சியும் சிங்கள மக்களின் உரிமைக்காகவே குரல்கொடுக்கிறது. 2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அவர்களிடம் இருந்த ஓர் ஆசனமும் பறிபோனதே?

*பதில்:* "சிஹல உறுமய" சிங்கள மக்களுக்கு மட்டுமே குரல் கொடுத்தது. ஆனால், நாங்கள் சிங்கள பௌத்தர்களுக்காகவே குரல் கொடுக்கிறோம்.

*கேள்வி:* தற்போது விடுதலைப் புலிகள் யுத்தத்தை நிறுத்தி சமஷ்டி அரசமைப்பு முறையிலான தீர்வுக்கு உடன்பாடு தெரிவித்துள்ளனர். இவ்வாறான நிலைமையில் நாட்டின் அரசியல் நிலைமையில் துரிதமான மாற்றங்கள் இடம்பெறுகின்றன இல்லையா?

*பதில்:* சமஷ்டி அரசியல் முறையானது எமது நாட்டிற்கு சற்றும் பொருத்தமானது அல்ல. கொண்டுவரப்படவுள்ள சமஷ்டி அரசமைப்பு முறையால் நாட்டில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் தங்களிடையே அடிபட்டுக்கொள்வர். எனவே, இது பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது. எனவே, பயங்கரவாதத்தைப் பயங்கரவாதத்தால் ஒழிக்கும் வகையிலான முன்னேற்றகரமான திட்டமே நாட்டிற்கு அவசியமானதாகும். ☆


# NEW SCIENCE CENTRE

**மணிக்கூட்டு வீதி, யாழ்நகர் (வெலிங்டன் சந்தி அருகில்).**

## A/L 2005

இலங்கை முன்னணி ஆசிரியர்களான:

**திரு.S.P.நாகநாதன், திரு.குணசிங்கம்**

யாழ்நகரின் முன்னணி ஆசிரியர்களுடன் இணைந்து ஆரம்பமாகிவிட்டது.

C-Maths { திரு.குணசிங்கம், திரு.பிரதீபன், திரு.குமுக்கேசன்


CHE. : திரு.அன்பழகன் (அன்பு)

BIO.: திரு.நாகநாதன், திரு.தற்பரன்

PHY. : திரு.சிவலிங்கம், திரு.சந்திரப்பிரகாஸ்

(சி25756)

S.P.நாகநாதன் கலந்துகொள்ளும் 25 மணித்தியால கருத்தரங்கு 06.01.2003 ஆரம்பம்.
கட்டணம் 200/=, பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கொழும்பு Y.M.C.A. மண்டபத்தில் 13.10.2002இல்
நடைபெற்ற கராட்டிப் போட்டியில்
இராஜானி போட்டோகான் கராத்தே டு இன்ரநஷனல் அசோசியேசன்
CHIEF INSTRUCTOR சென்.செய்.ஆர்.கணேசமூர்த்தியின்
மாணவரான

## சோதிலிங்கம் காண்டீபன்

பேப்பின் பட்டிப்போட்டியில் முதலாம் இடத்தில் தங்கப்பதக்கம் பெற்று சாதனை நிலைநாட்டியதைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இந்துஜன் உடற்பயிற்சி நிலைய மாணவரான இவர், யாழ். மாவட்ட மட்டத்தில் விளையாட்டு அமைச்சினால் 10.09.2000 இல் நடத்தப்பட்ட பளு தூக்கும் (Weight Lifting) 65-70Kg பிரிவில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தினூடாகப் பங்குபற்றி இரண்டாம் இடத்தைப்பெற்றும் சாதனை நிலைநாட்டியுள்ளார். இவரது சாதனைகள் புத்தாண்டுடன் தொடரட்டும்.

*காட்டுப்புலம்,*
*கெருடாவில் தெற்கு,*
*தொண்டமானாறு.* (12526)

K.V.சச்சி,
இந்துஜன் உடற்பயிற்சி
நிலையம்,


## சுன்னாகத்தில்

# இதோ அதிரடி மலிவு விற்பனை!

## 2003 ஜனவரி 15வரை.

மாணவர்களே!

பாடசாலை அப்பியாசக் கொப்பிகள்
எங்கும் கிடைக்காத மலிவு விலையில்.

120 பக்கம் 13/50
160 பக்கம் 18/=
200 பக்கம் 22/50
C.R. கொப்பிகள் 22/=, 33/=, 44/=

அமரர் S.T.நாகரட்ணம் அவர்களின் 14ஆவது
நினைவு தினத்தை முன்னிட்டு

## S.T.நாகலிங்கம் ஸ்தாபனத்தில்

பஸ்நிலையம் முன்பாக, சுன்னாகம். (12527)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**12 வருடங்களுக்கு முன்னர்**

# காணாமற்போன படகு கடற்படையிடமிருந்து மீட்பு

## மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.31

சுமார் 12 வருடங்களுக்கு முன்னர் மீனவர் ஒருவரால் தவறவிடப்பட்ட மீன்பிடிப்படகை மண்டைதீவுக் கடற்படையினரிடமிருந்து மீட்ட யாழ். மனித உரிமை ஆணைக்குழு, அதனை நேற்றுமுன்தினம் உரிமையாளரிடம் ஒப்படைத்துள்ளது.

சுமார் ஒரு லட்சம் ரூபாவிற்கும் அதிக பெறுமதியையுடைய இப்படகு, எழுவைதீவைச் சேர்ந்த சூசைப்பிள்ளை அருளப்பு என்பவருக்கு சொந்தமானது.

1991ஆம் ஆண்டு தவறவிடப்பட்ட தனது படகு கடற்படையினர் வசம் இருப்பதாகவும் அதனை தனக்கு மீளப் பெற்றுத்தருமாறும் படகு உரிமையாளர் எஸ்.அருளப்பு யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிட்டிருந்தார். அதனையடுத்து கடற்படையினருடன் தொடர்பு கொண்ட யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலக அதிகாரி ஆர்.பி.சந்திரசேகரா மீன்பிடிப்படகை உரிமையாளருக்கு பெற்றுக்கொடுத்தார். (ம-9)

# மாணவி மீது...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

சட்டவைத்திய அதிகாரி டாக்டர் ஸ்ரீ. ராஜேஸ்வரன் ஆலோசனை நடத்தினார். அவரது ஆலோசனைப்படி மரபணுச் சோதனை செய்வது என முடிவுசெய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக சட்டவைத்திய அதிகாரி மனு ஒன்றை யாழ்.நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இந்த மனுவை ஆராய்ந்த பின்னர் பிரஸ்தாப மாணவியின் உள்ளாடை மற்றும் பிரேத பிரிசோதனை அறிக்கை என்பவற்றையும் சந்தேகநபரின் இரத்த மாதிரியையும் மரபணுப் பரிசோதனைக்காக, ராகம பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி வைத்திய கலாநிதி அபய விக்கிரமவுக்கு அனுப்ப நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா அனுமதி வழங்கினார்.

சந்தேகநபரின் இரத்த மாதிரியை எடுக்க வசதியாக அவரை இன்று அதிகாலை 6 மணிக்கு சட்டவைத்திய அதிகாரி முன் ஆஜர் செய்யும்படி சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

மேற்படி இரத்த மாதிரியையும் உள்ளாடையையும் பாதுகாப்பாக எடுத்துச்சென்று மரபணுப்பரிசோதனைக்கு ஒப்படைத்த பின்பு அது தொடர்பான வைத்திய அறிக்கையை எதிர்வரும் 8ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்குமாறும் நீதிவான் கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குப் பணித்துள்ளார்.

இந்த மரபணுப் பரிசோதனைக்குத் தேவையான 9 ஆயிரம் ரூபா பணத்தை, நீதி அமைச்சினால் யாழ். மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட இல்லமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட இருபாலை 'கானான்' சிறுவர் இல்லப் பொறுப்பாளர் வண.பிதா ஏபிரகாம் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

அதேவேளை, உயிரிழந்த மாணவியின் உடல் உறுப்புக்கள் பரிசோதனைக்காக கொழும்பு சட்டவைத்திய அதிகாரிக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டன. (ம-3-10)

### கலவையாளர் நியமனம்

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு மருந்துக் கலவையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இங்கு முன்னர் பணியாற்றிய மருந்துக் கலவையாளர் ஓய்வுபெற்றுச் சென்றதைத் தொடர்ந்து நீண்டகாலமாக இவ்வைத்தியசாலை ஊழியர்களே இப்பணியையும் மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-100)

# நெல்லியடி...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறுவர் உரிமைகள் பாதுகாப்புக் குழுக்களில் யாழ்.மாவட்டக் குழுவே சிறப்பாக செயற்பட்டு வருகிறது.

எமது சபையின் அடிப்படை நோக்கம் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்துவதாகும். திறன், பாதுகாப்பு மற்றும் புனர்வாழ்வு, சட்ட அமைப்பும் கண்காணிப்புடன் புலனாய்வும் என்ற ஒன்றோடு ஒன்று இணைந்த விடயங்களில் சிறுவர்கள் தொடர்பாக நாம் அதிக கவனம் செலுத்துகின்றோம். சிறுவர் பாதுகாப்பு என்பது மனித உரிமைகளில் இருந்து வேறுபட்ட விடயமல்ல. ஆனால், இது முக்கியத்துவம்வாய்ந்த அம்சமாகும்.

யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவில் அதிகளவு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக குழு சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது என்பதையே காட்டுகின்றது - என்றார்.

யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உரையாற்றுகையில், பொலீஸ் நிலைய விசாரணைகளின் போது குறிப்பாக சிறுவர்கள் தொடர்பான நடவடிக்கைகள் அனைத்தும் தமிழிலேயே இடம்பெறவேண்டும். இந்நிலைமை கடைப்பிடிக்கப்பட வேண்டியது அவசியமாகும் என்று குறிப்பிட்டார். 'சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கான சட்டத் திருத்தங்கள்' என்ற விடயம் தொடர்பாக நீதி அமைச்சின் மேலதிக செயலர் செல்வி லலானி பேர்ஸனும் -

'தற்காலச் சட்ட அமைப்புக்குள் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பங்கு' என்ற விடயம் தொடர்பாக சட்டத்தரணி எம்.ஏ.வசந்தகுமாரன் உரையாற்றினார்கள்.(ம-9)

# விஞ்ஞானபீட மாணவர் எதிர்ப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.31

விஞ்ஞான பீடத்திலிருந்த பொருள்கள் சில அண்மையில் களவாடப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவித்து, விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம் நேற்று எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டது.




காலை 9 மணிக்கு பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்திற்கு முன்பாக ஒன்றுகூடிய விஞ்ஞானபீட மாணவர்கள், பதிவாளர் அலுவலகத்தின் செயற்பாடுகள் அனைத்தையும் முடக்கும் வகையில் அலுவலகத்தைப் பூட்டி அதற்குமுன் அமர்ந்து தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

இதனால், பதிவாளர் அலுவலகப் பணிகள் பாதிப்படைந்தன.

எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட மாணவர்கள் தமது நாளாந்த விரிவுரைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சுழற்சி முறையில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்த எதிர்ப்பு நடவடிக்கை இன்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்து இடம்பெறும் என்றும்-

இன்னும் ஓரிரு தினங்களுக்குள் சாதகமான பதிலை பல்கலைக்கழக நிர்வாகம் தராதவிடத்து தமது நடவடிககைகள் பல பிரிவுகளுக்கும் விஸ்தரிககப் போவதாகவும் -

விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இதேவேளை - இது தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரிடம் கேட்டபோது, இச்சம்பவம் தொடர்பாக யாழ்.பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் -

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரிப்பதற்கு கலைப் பீடாதிபதி உட்பட இருவர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவித்தார் (ம-5)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மீனாட்சி அம்மா கனகசுந்தரம்

(S.N.K.சுந்தரம்)

புங்குடுதீவு மேற்கு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 33 (61),சப்பல் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் தற்பொழுது கொழும்பில் வசித்தவருமான திருமதி மீனாட்சி அம்மா கனகசுந்தரம் நேற்று (30.12.2002) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2002) செவ்வாய்க் கிழமை கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*3/1, கிறேஸ் கோட்,*
*79/1, ஜெம்பட்டாவீதி,*
*கொழும்பு - 13.*
T.P. 386263

தகவல்:
திருமதி செல்வராணி மகாலிங்கம்
*(மகள்)*

(12546)

## திருமதி கந்தசாமி கனகாபிசேகம்

காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடம் செட்டியதாழ்வு வைரவர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கனகாபிசேகம் அவர்கள் நேற்று (30.12.2002) திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் கந்தசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி திருக்கேதீஸ்வரி மற்றும் ஜெகதீஸ்வரி (ஆசிரியர், வல்லிபுணம் பாடசாலை, வன்னி), அன்பரசி, சிவகுமார் (சுவிஸ்), நந்தகுமார் (மாவீரர்), நளினி, சுரேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2002) செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோயில் வீதி (நல்லூர்),*
*கம்பன் கோட்டம் முன்பாக,*
*யாழ்ப்பாணம்.*

(12547)

தகவல்:
சுரேஸ்
*(மகன்)*

## செல்லையா இராசையா

உடுவில் கற்பக்குணை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராசையா நேற்று (30.12.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தெய்வானையின் அன்பு மகனும் வல்லிபுரம் - நாகமுத்துவின் மருமகனும் பவளரத்தினத்தின அன்புக் கணவரும் ஐயாத்துரை, மார்க்கண்டு, இராசம்மா மற்றும் தங்கம்மா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற நல்லம்மாவின் மைத்துனரும் மற்றும் தவநாதன் (ஓய்வு பெற்ற ஊழியர், இலங்கை மின்சாரசபை.), லோகினிதேவி, கருணாதேவி, இரஞ்சினிதேவி, சுகுணாதேவி (கனடா), சுபத்திராதேவி (பிரான்ஸ்), லோகநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற முருகேசு (குமாரசாமி - ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்) மற்றும் கந்தசாமி, அருமைத்துரை (போஷர்), லோகேஸ்வரன் (கனடா), சத்தியரஞ்சன் (பிரான்ஸ்), கமலாம்பிகை, உதயராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற மகித்தன் சுபாஜினி மற்றும் விஜயகுமார் சுகந்தினி, கனடாவைச் சேர்ந்த ஜெயக்குமார் மைதிலி, ஜெயசீலன், ஜெயநாதன் மற்றும் ஸ்ரீதர் - ஜெயந்தா, கிரிதரன் ஜெனிதா, கவிதா, கம்சிகா, லண்டனைச் சேர்ந்த பங்கையச்செல்வன் பபிதா, லகஸ்சாயினி - தயானந்தன், கபிலன் மற்றும் ஜேர்மனியைச் சேர்ந்த செந்தூர்செல்வன் - சோபனா, அகல்யா, மகிந்தன் மற்றும் பிரான்ஸைச் சேர்ந்த சதிசன், சஜி மற்றும் ரமேஸ் (டுபாய்) ஆகியோரின் பேரனும் சங்கமித்தா, மகித்தன், முகுந்தன், சுகந்தன், பதிப், நிவேந், பனுஜா, நிதுன், விதுடினா, மகிஷா, கீர்தனன், மகிஷா, டிலக்சனா, தனுஜன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2002) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கம்புலம் கந்தரோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

*கற்பக்குணை,*
*உடுவில்,*
*சுன்னாகம்.*

(12545)

தகவல்:
இ.லோகநாதன் (மகன்),
இ.தவநாதன் (மகன்)
(ஓய்வுபெற்ற மின்சாரசபை ஊழியர்)

எமது நேற்றைய புதிய வீடியோ CD வெளியீடு
★ சாய்குமாரின் தாதாக்கள் ராஜ்ஜியம்
★ Five Star CD யில் காதல் சுகமானது
பிரதிகள் உடன் பெறலாம்.
ITN
பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி.
(C/25773)

புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தரம் 1 முதல் O/L வரையான வகுப்புகள் சிறப்பாக நடைபெறுகின்றன.
புதிய பிரிவு ② ஆரம்பம் 01.01.2003 புதன்
✷ ஒவ்வொரு வகுப்பிலும் 35 மணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.
✷ மாதாந்தப் பரீட்சை நடைபெற்று கணிப்பீட்டு அறிக்கை வழங்கப்படும்.
✷ புதிய அனுமதிகள் 15.01.2003 வரை வழங்கப்படும்.
தரம் 5 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் தெரிவுக்கான புதிய பிரிவு ஆரம்பம் : 01.01.2003 புதன்
✪ ஞாயிறு தோறும் காலை பயிற்சிப் பரீட்சை.
✪ தூர இட மாணவர்களின் வசதிகருதி சனி, ஞாயிறு வகுப்புகள்.
✪ விசேட சிங்கள வகுப்பும் நடைபெறுகின்றது.
(12544)

# இதய அஞ்சலி

எமது கல்லூரி அபிவிருத்திச் சங்க உறுப்பினர்
**ஆறுமுகம் நடேசர்** அவர்கள்
*(இளைப்பாறிய ஆசிரியர்)*
காலமானதையிட்டு எமது அனுதாபங்களையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையையும் சமர்ப்பிக்கின்றோம்.

*...கந்தவரோதயக் கல்லூரி,*
*கந்தரோடை,*
*சுன்னாகம்.* (12542)

அதிபர், ஆசிரியர்கள்,
கல்லூரி அபிவிருத்திச் சங்கம்.

# கண்ணீர் அஞ்சலி

எமது சனசமூகநிலையத்தின் முன்னாள் தலைவரும்
(A.M.T. Transports, Thulasi Trade Center, Colombo)
உரிமையாளருமாகிய **முருகேசு தனநாயகம்** அவர்களினதும், எமது நிலையத்தின் உறுப்பினருமாகிய **முருகேசு கணேசலிங்கம்**
(U.S.A Trading company - Colombo) அவர்களின்

அன்புத் தந்தை

## அப்புக்குட்டி முருகேசு (அ.மு)

அவர்கள் 29.12.2002 அன்று கொழும்பில் இயற்கை எய்தியதையிட்டு அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*இருபாலை கிழக்கு,*
*ஸ்ரீமுருகன் ச.ச.நிலையம்,*
*கோப்பாய்.*

- நிலைய நிர்வாகிகள்

(12543)

ஆள் தேவை
எமது நிறுவனத்தில் கடமையாற்றக்கூடிய A/L படித்த ஆண்/பெண் இருபாலாரும் தேவை.
தொடர்பு:
01.01.2003 புதன் 11 மணி.
பொருளியற்கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
(12380)

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.
A/L 2005 ★கணித★ ★உயிரியல்★
எமது SUPER GRADE ஆசிரியர்குழு
பௌதிகம் : ஜெயசீலன்
இரசாயனம் : மகேஸ்வரன்
இணைந்த கணிதம்: யாழ். பிரபல ஆசிரியர்.
உயிரியல் : ஞானேந்திரன் தயாபரன்.
ஆரம்பம் : 1.1.2003 புதன் காலை 9.00
(12463)

ராஜா யாழ்ப்பாணம்.
இன்று மட்டும்
எம்.ஜி.ஆர்., ராதாசலூஜா நடித்த
இதயக்கனி
10.30, 2.30
இன்று மட்டும்
AIR FORCE ONE
இரவு 7.00 - 9.30
நாளை முதல்
சுந்தரா டிராவல்ஸ்
(C-25437)

நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜுன், சிம்ரன், மும்தாஜ், ஆனந்தராஜ் நடித்த
ஏழுமலை
காட்சிகள்: 11.00, 3.00 (ரீலஸ்)
விசேட காட்சிகள்:
வெள்ளி, சனி, ஞாயிறு: 11.00, 2.00, 6.30 (பு.நே.)
(12534)

நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்று 31.12.2002 முதல்
அஜித் (இருவேடம்), மீனா நடித்த
காட்சி நேரம்:11.00, 2.45, 6.00 (பு.நே.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'Z ஸ்கோர்' பல்கலை அனுமதிமுறை வடக்கிற்கு செய்த பெரிய அநியாயம்!

## விநாயகமூர்த்தி எம்.பி கடிதம்

கொழும்பு,டிசெ.31

பல்கலைக்கழக அனுமதிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் புதிய "Z ஸ்கோர்" முறை வடக்கிற்கு பெரும் அநியாயம் செய்து விட்டது. தகுதி மற்றும் பிரதேச அடிப்படையில் பல்கலைக்கழகத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய பல மாணவர்களை இந்தப் புதிய அனுமதிமுறை பழி வாங்கி விட்டது. அவர்கள் உயர்கல்வி பெறும் வாய்ப்பைப் பறித்துவிட்டது.

- இவ்வாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார் யாழ் மாவட்ட எம்.பியும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி.

அவர், தாம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் சேர்ந்து படிக்கக் காத்திருந்த மாணவர்களில் ஒரு பகுதியினரின் தலையில் வீழ்ந்த பேரிடியை சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி தகுதி அடிப்படையிலும் பிரதேச அடிப்படையிலும் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் சேர்ந்து படிப்பதற்கு அருகதையுடைய மாணவர்கள் 36 பேர் "Z ஸ்கோர்" முறையில் 31 மாணவர்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று அறிகிறோம். விடுபட்ட இந்த 5 மாணவர்களின் கதி என்ன? அவர்கள் என்ன பாவம் செய்தார்கள் என்று கேட்கிறார் விநாயகமூர்த்தி.

"Z ஸ்கோர்" முறையால் யாழ்ப்பாணத்தில் பல மாணவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை கூட உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்.

பல கல்வி மான்களும், பெற்றோரும் இந்த விடயம் பற்றி உங்களுக்கு முறைப்பாடு செய்திருக்கிறார்கள் என்று அறியவருகின்றது.

"Z ஸ்கோர்" முறை, குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கு அறவே உதவாது. திறமையுள்ள பல மாணவர்கள் பல்கலைக்களகத்தில் சேர்ந்து உயர் கல்வி பெறும் வாய்ப்பைப் பறிக்கிறது. இந்தமுறையை இங்கு தொடர்ந்து இருக்க விடுவதா என தயவு செய்து உடனே மறு பரிசீலனை செய்யுங்கள் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவரை விநாயகமூர்த்தி எம்.பி. கேட்டிருக்கிறார். (ம)

# மத்திய கிழக்கில் சிறை வைக்கப்பட்ட 175 இலங்கையர் இன்று வருகிறார்கள்

## தொழில் அமைச்சர் பேச்சு நடத்தியதால் விடுதலை

கொழும்பு,டிசெ.31

மத்திய கிழக்கு நாடுகளில் பல்வேறு காரணங்களுக்காக சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த 175 இலங்கையர்கள் இன்று இலங்கைக்கு அழைத்து வரப்படுவர். இவர்களுள் 150 பேர் பெண்கள்.

தொழில், தொழில் வாய்ப்பு அமைச்சர் மஹிந்த சமரசிங்க அண்மையில் மத்தியகிழக்கு நாடுகளுக்கு விஜயம் செய்து நடத்திய பேச்சுக்களின் பயனாகவே அவர்களுக்கு விடுதலை கிட்டியிருக்கிறது.

லெபனான், கட்டார், சவூதி அரேபியா ஆகிய நாடுகளில் தொழில் செய்வதற்கான அனுமதி பெறாமலும் அங்கு தங்கி இருப்பதற்கான விசா இல்லாததனாலும், ஏனைய குற்றச் செயல்களுக்காகவும் இவர்கள் சிறை வைக்கப்பட்டிருந்தனர்.

இன்று அதிகாலை நாடு திரும்பும் அமைச்சர் சமரசிங்க மேற்படி 175 இலங்கையர்களையும் அழைத்து வருகின்றார். இவர்களுக்கான விமானச் சீட்டுக்களை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் வழங்கி உள்ளது. (ம)

## புதிய தளபதி ஜனவரி 3இல் பதவியேற்பு

வடக்கு - கிழக்கு கடற்படை கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் ரியர் அட்மிரல் நந்தன துடுவேவத்த ஜனவரி 3ஆம் திகதி பதவியேற்பார்.

இப்பதவியை வகித்த ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, கொழும்பு கடற்படை தலைமையகத்தில் இயக்குநர் நாயகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்தியாவில் பாதுகாப்பு பயிற்சி நிலையத்தில் ஒரு வருடப் பயிற்சியைப் பெற்ற ரியர் அட்மிரல் துடுவேவத்த, முன்னர் வடக்கில் பிரதிக் கடற்படைக் கட்டளைத் தளபதியாகப் பணியாற்றியிருக்கிறார். (ம)

# வைரஸ் காய்ச்சல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளர் வைத்திய கலாநிதி உ. சிவபாதசுந்தரம் சில விளக்கங்களை அனுப்பி வைத்திருக்கிறார். அவர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

'30.12.2002 அன்று 'உதயன்' பத்திரிகையில் முன்பக்கத்தில் வெளியான செய்தியில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்த கூற்றுத் தொடர்பாக சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பின்வரும் விடயங்களை பொது மக்களின் கவனத்துக்கு கொண்டு வருகிறார்.

தற்போது பரவிவரும் வைரஸ் காய்ச்சலுக்கும் கிணற்றுக்கு குளோரின் இடுதலுக்கும் ஒருவித தொடர்பும் இல்லை. மற்றும் டெங்கு காய்ச்சல், உணவு மற்றும் குடிதண்ணீர் பாவனையில் சுகாதாரம் பேணப்படாமையினால் ஏற்படுகின்றது என்ற கருத்து முற்றிலும் தவறானது.

யாழ்.குடாநாட்டில் பரவிய குடல் சார் தொற்று நோய்களான வாந்திபேதி, நெருப்புக் காய்ச்சல், வயிற்றுளைவு போன்ற நோய்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளான சுகாதாரக் கல்வி நிகழ்வுகளும் கிணற்றுக்கு குளோரின் இடுதலும் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்களால் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. நீரில் குளோரின் அளவை பரிசோதிக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நுளம்பினால் பரவும் மலேரியா, டெங்கு காய்ச்சல், தொடர்பான கட்டுப்பாட்டு நடவடிக்கைக்கான ஆய்வுகள் மேற்கொண்டு அப்பகுதி மக்களுக்கு விழிப்புணர்வு தொடர்ந்து அளிக்கப்படுகிறது.

சுற்றாடல் மற்றும் சுகாதார மேம்பாட்டிற்கான அடிப்படை செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு அந்தந்த பிரதேச சபைகள், மாநகர சபைகளைச் சார்ந்தது. இவற்றுக்கான தொழில்நுட்ப மருத்துவ ஆலோசனைகள் சுகாதாரத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்டத்தில் ஏனைய மாவட்டத்தைவிட ஆளணி, வாகனப் பற்றாக்குறை இருந்தும் இங்குள்ள சுகாதர உத்தியோகத்தர்கள் உரிய கடமைகளை செய்து வருகின்றார்கள் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# உயர் பாது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரிலேயே நாம் இங்கு வந்துள்ளோம். நாம் முடிந்தவரை பக்கச்சார்பின்றியே செயற்பட்டு வருகின்றோம்.

உயர் பாதுகாப்பு வலயங்களை தற்போதுள்ள காலகட்டத்தில் அகற்ற முடியாது காலப்போக்கில் இது சாத்தியமாகலாம். மீள்குடியமர்வு அவசியம்தான். ஆனால், முதலில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியேயுள்ள பகுதிகளில் மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்படவேண்டும்.

- இவ்வாறு போர்நிறுத்த கண்காணிப்பு குழுவின் பிரதித்தலைவர் ஹொக்லண்ட் தெரிவித்தார். (ம)

# பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய பூட்டுக்களைப் போட்டுப் பூட்டினர். பின்னர் வாசல்களுக்கு முன்பாக சுலோக அட்டைகளுடன் தரையில் அமர்ந்து தமது போராட்டத்தை ஆரம்பித்தனர்.

தம்க்கு சாதகமான பதில் கிடைக்கும்வரை தமது மறியல்போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என பொன்னாலை மக்கள் ஒன்றியத் தலைவர் தெரிவித்தார்.

இந்த மறியல்போராட்டத்தினால் இடம்பெயர்ந்த மக்களின் உலர்உணவு நிவாரணம், பாடசாலை மாணவர்களின் சீருடைக்கான முத்திரை விநியோகம், புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி நடவடிக்கைகள், மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கான கொடுப்பனவு உட்பட சகல முக்கியமான கடமைகளும் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாகத் தெரிகிறது. வருடக் கடைசி என்பதனால் பல கொடுப்பனவு வேலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. (ம-86-175-28-135-173)

# கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இவற்றைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நாடாளுமன்றத்தை கலைத்து அரசாங்கத்தை வீட்டுக்கனுப்பவோ இன்றேல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்று மாற்று அரசாங்கம் அமைக்கவோ எம்மால் முடியும். 20 ஐ.தே.க. எம்.பிக்கள் பொ.ஐ. முன்னணியில் இணையத் தயாராக இருக்கின்றனர்.

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு தற்பொழுது இருந்தாலும் எமக்குத் தேவையான நேரத்தில் அன்றி ரணிலுக்கு தேவையான நேரத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்படமாட்டாது. அதனாலேயே நாடுமுழுவதிலும் கட்சிக்கிளைகளை புனரமைத்து வருகிறோம்.

கட்சிக்கிளைகள் புனரமைக்கப்பட்டு எமது அரசாங்கம் அமைவது நிச்சயமானதும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு அரசாங்கம் வீட்டுக்கு அனுப்பப்படும்.

- இவ்வாறு இவர் கூறினார்.(ம)

# பாதுகாப்பு வலய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரையும் ஓர் இணக்க நிலைக்குக் கொண்டுவர முற்பட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முயற்சியும் வெற்றிபெறவில்லை. இரு தரப்பினரையும் பேசவைக்க கண்காணிப்புக் குழு விடுத்த அழைப்பை விடுதலைப் புலிகள் நிராகரித்துவிட்டதாகத் தெரிகிறது. இந்த விடயம் குறித்து இனி தாய்லாந்துப் பேச்சுக்களிலேயே ஆராய்ந்து கொள்ளலாம் என புலிகள் தெரிவித்துவிட்டனர்.

இந்த நிலையில், பிரதமரின் பணிப்பின் பேரில் பலாலியில் இன்று உயர்மட்ட மாநாடு இடம்பெறவுள்ளது.

குடாநாட்டில் பலாலி தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் உள்ள அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கவேண்டும் என்றும் -

இந்த மீள்குடியமர்வுக்கு தடையாக இருக்கும் யாழ்.படைகளின் தளபதியான மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, வடபிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் சரத் வீரசேகர ஆகியோரை இடமாற்றம் செய்யவேண்டும் என்றும் -

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் பிரதமருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இதைத் தொடர்ந்து பிரதமரின் பணிப்பின் பேரில் இன்றைய உயர் மட்ட மாநாடு கூட்டப்படுகின்றது.

அமைச்சர் மிலிந்த மொறகொடவுடன் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல உட்பட 7 பேர் இந்த மாநாட்டில் பங்குபற்றவிருக்கின்றனர்.

உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தை மக்கள் மீளக்குடியமரக் கூடிய வகையில் மாற்றியமைப்பது குறித்தும் -

எந்த எந்தப் பிரதேசத்தில் மக்களை உடன் மீளக்குடியமர்த்தலாம் என்பது குறித்தும் - இந்த மாநாட்டில் ஆராயப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படாத வகையில் எவ்வாறு உயர் பாதுகாப்பு வலயங்களை பராமரிப்பது என்பது குறித்தும் ஆராயப்படவிருக்கின்றது.

மிலிந்த மொறகொட தலைமையிலான குழு பலாலிக்கு வெளியே உள்ள பாதுகாப்பு வலயங்களையும் நேரில் பார்வையிடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-3-4)


இணைந்த கணிதம்
(COMBINED MATHS)
பிரத்தியேக வகுப்பு A/L 2005
S.இலட்சுமணன்
ஆரம்பம் : 2003-01-06 திங்கள் பி.ப.3 மணி (புதிய நேரம்)
இடம் : 410, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
பதிவுகளை 06.01.2003 திகதிக்கு முன் மேற்கொள்ளவும்
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
(12520)

கபிலா ✪ கபிலா ✪ கபிலா ✪ கபிலா ✪ கபிலா ✪ கபிலா
இலவசம்! இலவசம்!! இலவசம்!!!
மாணவர்களுக்குரிய..........
கறுப்பு, வெள்ளை சப்பாத்து 'D.S.I.' ஒன்றிற்கு
'D.S.I.' றபர் சிலிப்பர் ஒன்று இலவசம்.
நீங்களும் பெற்றுக்கொள்ள......
முந்துங்கள்!!!
BATA
D.S.I.
கபிலா
காலணியகம்
KBILA SHOE PALACE
24, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
இச்சலுகை, புதுவருடப் பண்டிகைக்கு மாத்திரமே!
(12471)

நியூ றோயல் அக்கடமி
சங்கத்தானை.
A/L 2005
கலை, வர்த்தகம்.
ஆரம்பம்: 06-01-2003
திங்கள் 2 மணி (ப.நே.)
★ எமது வழமையான ஆசிரியர் குழாம்.
(12356)

எமது (வீணை) வீடியோ CD வெளியீடு
காதல் சுகமானது
(பிரதிகள் உடன் பெறலாம்)
வீடியோ விமல் யாழ்ப்பாணம்.
(12512)

N.E.I. நல்லூர்
A/Lதமிழ்
புதன், வியாழன், வெள்ளி
5.00 p.m.
வகுப்புகள்
(25754)

SHAMROCK
A/L 2005
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள்
ஆரம்பம்
★ 4th Jan. - Sat. 2.30 p.m.
★ Gr. 6 முதல் O/L வரை.
(12541)

I.B.S
நல்லூர் கிளை – முத்திரைச் சந்தி
கலை, வர்த்தகம்
A/L 2005
Acc. – K.சிறீதரன் B.B.A.(Hons)
Com. – N.உமாகாந்த் B. com(Hons)
Eco. – S.விவேகானந்தம் B.A.(Hons)Eco.Spl.
Log. – N.உதயன் B.A.(Hons)Phi.Spl.
Tam. – P.பாலமுரளி B.A.(Hons) Ta.Spl.
Poli. – R.ஸ்ரீரங்கநாதன் B.A(Hons)Pol.Spl.
Drama – N.மதி
Hin. – பிரபல ஆசிரியர்
ஆரம்பம் : 04.01.2003
(12349)

எம்முடன் இணைவோர் உயர் கல்வி பெறுவோர்
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
A/L 2005
கலை, வர்த்தக வகுப்புக்கள்
ஆரம்பம் : 05.01.2003 8 a.m.
Acc. - திரு. பாலவாசன்
Eco. - திரு.விக்கி
Com. - திரு.நந்தீஸ் (பிரிவு I), திரு.யசோ (பிரிவு II)
Log. - திரு.சயந்தன்
Tam. - திரு. குழந்தை (பிரிவு I), திரு. லிங்கம் (பிரிவு II)
H/C. - திரு. பத்மராஜா
Geo. - திரு. பாபு
Hin. - திரு. N.T.தரன்
Hist. - திரு. சுதன்
P/Sci. - திரு. ஸ்ரீரங்கன்
Drama - திரு. மதி
Chri. - திரு. வசந்தன்
★ 2002 O/L எடுத்த எமது பழைய மாணவர்களுக்கு அனுமதிக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.
★ அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
(12412)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.12.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org